பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 14 ஞாயிற்றுக்கிழமை (28.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 181

# அமைதி முயற்சிகளை சீர்குலைப்பதன் மூலம் தமிழர் மீது இன அழிப்பை ஏவிவிட அரசு முயற்சி

## ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடை குறித்து தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி,மே28

பேச்சுக்களை முடக்கி - அமைதி முயற்சிகளைச் சீர்குலைப்பதன் மூலம் தமிழர் மீது இன அழிப்பை ஏவிவிடும் முயற்சியே ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை முஸ்தீபு.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்சன் போவரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர் மத்தியில் உரை நிகழ்த்திய போதே அரசியல்துறைப் பொறுப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேயின் விசேட தூதுவர் போவர் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்துக்குச் சென்று ஆலோசனை நடத்தினார். பின்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்துக்கும் சென்ற அவர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை ஹான்சன் போவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் உள்ளிட்டோரும் பங்குபற்றினர்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்ததாவது-

கேள்வி: இன்றைய சந்திப்பு தொடர்பாக?

பதில்: நோர்வேயின் சிறப்புத் தூதுவரை

(02ஆம் பக்கம் பார்க்க)

# ஒஸ்லோ கூட்டத்தில் பங்குபற்றுவதா? புலிகளின் தீர்மானம் தாமதமாகும்!

## ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவின் அடிப்படையில் பதில் அமையுமாம்

கிளிநொச்சி,மே28

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 8, 9ஆம் திகதிகளில் நோர்வே அனுசரணைத் தரப்புக் கூட்டுகின்ற கூட்டத்தில் பங்குபற்றுமாறு இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்திருக்கின்றார். ஆனால், இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதா என்பது தொடர்பான புலிகளின் தீர்மானம் தாமதமாகவே வெளியாகும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளின் விவகாரம் தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய அமைச்சரவை கவுன்ஸிலின் கூட்டம் நாளை நடைபெறுகின்றது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகள் நாளை மறுதினம் கூடுகின்றன. இந்தக் கூட்டங்களின் பெறுபேறுகளின் அடிப்படையில்தான் ஒஸ்லோ கூட்டத்தில் பங்குபற்றுவதா என்பது தொடர்பான புலிகளின் தீர்மானம் அமையும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக அவசரமாக ஆராயவேண்டியிருப்பதாகத் தெரிவித்து, அதற்காக எதிர்வரும் 8, 9ஆம் திகதிகளில் நோர்வேயில் கூட்டப்படும் கூட்டத்துக்கு உயர் மட்டப் பிரதிநிதிகளை அனுப்புங்கள்

(02ஆம் பக்கம் பார்க்க)

## திகிலவெட்டியில் தாக்குதல் 2 சிறுவர்கள் உயிரிழப்பு

மட்டக்களப்பு,மே28

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள எல்லைப்புறக் கிராமமான திகில வெட்டி என்ற இடத்தில் நேற்றுப் பிற்பகல் ஊடுருவிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விவசாயிகள் பயணித்த உழவுஇயந்திரம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் இரு சிறுவர்கள் உயிரிழந்தனர். மூவர் படுகாயமடைந்தனர் என்று மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

## பேச்சு உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும் புதுடில்லியில் சொல்ஹெய்ம் வலியுறுத்து

புதுடில்லி,மே28

அமைதிப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படவேண்டும். அன்றேல் யுத்த சூழல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அரசும், விடுதலைப் புலிகளும் இதனை உணர்ந்து விரைந்து செயற்படவேண்டும்.

இவ்வாறு நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய எரிக் சொல்ஹெய்ம், அன்றைய தினமே புதுடில்லி சென்றிருந்தார்.

புதுடில்லி சென்றிருந்த அவர் நேற்றைய தினம் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி சிற்றுண்டிச்சாலையில் படையினர் தேடுதல்

யாழ்.போதனா வைத்தியசாலையின் வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை நேற்றுமாலை படையினரின் திடீர் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

இந்தத் தேடுதலின்போது படையினரால் சிலர் கைது செய்யப்பட்டதாகவும் தகவல் ஒன்று தெரிவித்தது.

படையினரின் தேடுதலையடுத்து ஆஸ்பத்திரி சிற்றுண்டிச்சாலை உடனடியாக மூடப்பட்டது. இதனால், ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சைப் பெறுவோர் மற்றும் அவர்களுக்கான பார்வையாளர்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

## வில்பத்துக் காட்டில் குண்டுவெடிப்பு; 8 பேர் பலி!

கொழும்பு,மே 28

மதவாச்சிக்கும் அனுராதபுரத்திற்கும் இடையில் அமைந்துள்ள வில்பத்து விலங்குகள் சரணாலய காட்டுப்பகுதியில் நேற்று இடம்பெற்றதாக் கூறப்படும் குண்டுவெடிப்புச சம்பவம் ஒன்றில் 8 பேர் இறந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

வில்பத்தில் பிரதான வீதியிலிருந்து சுமார் 40 கிலோமீற்றர் தொலைவில்- நடுக்காட்டுப் பகுதிக்குள் - ஜீப்வண்டி ஒன்றில் சென்றவர்களே இந்த அனர்த்தத்தில் சிக்கினர் என்று கூறப்பட்டது.

# இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்: 3ஆயிரம் பேர் பலி!

ஜகார்த்தா,மே28

இந்தோனேஷியாவின் யோக்யகர்தா என்னும் இடத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி மூவாயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகினர். ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

இத்தகவலை இந்தோனேஷிய சமூக நலத்துறை அதிகாரி ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தொலைபேசி மூலம் வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

மத்திய ஜாவா மற்றும் யோக்யகர்தா பகுதிகளில் உள்ள 5 மாவட்டங்களில் நேற்றுக் காலை உள்ளூர் நேரப்படி 5.54 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 6.2 ஆக பதிவாகியிருந்தது. இதுவரை 500 பேரின் சடலங்கள் மீட் கப்பட்டுள்ளன. இன்னும் ஏராளமானோரின் சடலங்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில் இந்தத் துயரச் சம்பவத் தில் 2ஆயிரத்து 800 பேர் காயமடைந்ததாக இந்தோனேஷிய செஞ்சிலுவைச் சங்கத்தின் பேரழிவு மீட்புப் பிரிவுத் தலைவர் அரிபி முகாதி தெரிவித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மூதூர் இறங்கு துறையில் ஒருவர் கடத்தப்பட்டார்

திருகோணமலை,மே28

மூதூர் இறங்குதுறையில் நின்ற ஒருவர் நேற்றுக்காலை 9.30 மணியளவில் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து திருகோணமலை நகருக்குச் செல்வதற்காக மூதூர் இறங்குதுறைக்கு வந்து படகுக்காகக் காத்திருந்த மாதவராசா சதானந்தன் என்வரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபரை கடற்படையினர் சோதனை செய்துகொண்டிருந்த சமயமே அவர் கடத்தப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.





**நேற்று கிளிநொச்சி வந்த நோர்வேயின் விசேட தூதர் ஹான்ஸன் போவரை விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்று அழைத்து வருவதையும் அவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் பிரமுகர்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.**

# வீடியோக் கடை உரிமையாளர் வெள்ளியிரவு சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,மே28

அரியாலையில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த புவனேந்திரன் வோல்டர் மயூரன்(வயது 27) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் அரியாலை, பொன்னம்பலம் வீதியிலுள்ள தனது வீடியோக் கடையைப் பூட்டிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தார் என்றும் -

அவ்வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் - கூறப்பட்டது.

இவரது சடலம் விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. (15)

# அச்சுவேலியிலும் இருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,மே28

அச்சுவேலியில் இரு இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி பயிற்றோலையைச் சேர்ந்த மாதர் செல்லத்துரை (வயது 75) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு தமிழரசுக் கட்சி சார்பில் வேட்பாளராகப் போட்டியிடவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வீட்டில் இருந்த இவரை இனந்தெரியாதவர்கள் ஜன்னலினூடாகச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதற்கிடையில் அதே பிடத்தைச் சேர்ந்த வர்த்தகரான சின்னத்துரை புவிராசா(வயது 35) என்பவர் அன்றையதினம் இரவு 7 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் அச்சுவேலி தெற்கிலுள்ள தன்து கடையைப் பூட்டிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தார் என்றும் -

அவ்வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் அவரைச் சுட்டு விட்டுத் தப்பிச்சென்றுவிட்டனர் என்றும் கூறப்பட்டது.

இருவரது சடலமும் விசாரணைகளின் பின்னர் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (15-11)

## மதகுருவைக் காணவில்லை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே28

கோப்பாயில் இருந்து கைதடிக்கு நேற்றுமுன்தினம் மாலை பூசைக்கு சென்ற பூசகர் ஒருவரைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த வைத்தீஸ்வரசர்மா வெங்கடகிருஷ்ண சர்மா (வயது 50) என்பரைவயே காணவில்லை என அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

# ஒஸ்லோ கூட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கோரும் கடிதங்களை நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இரு தினங்களுக்கு முன்னர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோருக்கு தனித்தனியாக அனுப்பிவைத்தார் எனத் தெரிகின்றது.

இந்தக் கடிதங்களில் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்பாக இரண்டு விடயங்களை அமைச்சர் சொல்ஹெய்ம் குறிப்பிட்டிருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

✱ ஒன்று - யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகளை விரிவாக ஆராய்தல்.

✱ மற்றையது - புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத் தடை வருமானால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகியநாடுகளைச் சேர்ந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களின் எதிர்காலப் பங்கு, பணி குறித்துத் தீர் மானித்தல்.

யுத்தநிறுத்தக்கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள - நோர்வே, ஐஸ்லாந்து தவிர்ந்த மேற்படி மூன்று நாடுகளின் கண்காணிப்பாளர்கள் ஐரோப்பிய ஒன்றியத் தடைகாரணமாக கண்காணிப்புப் பணியில் ஈடபடமுடியாத நிலைமை ஏற்படுமா?, அப்படி ஏற்பட்டால் முழுதாக முடங்கக் கூடிய கண்காணிப்புப் பணியை அதன் பின்னர் எவ்வாறு தொடர்வது? - என்பன பற்றி எல்லாம் இலங்கை அரசு, புலிகள் ஆகிய இரு தரப்புக்களுடனும் அவசரமாகக் கூடி ஆராயவேண்டும் என்று எரிக் சொல்ஹெய்ம் கருதுகிறார் எனத் தெரிகின்றது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம் இணைத் தலைமைகளின் முடிவு ஆகியவற்றை அறிந்து அவற்றைப் பரிசீலித்த பின்னரே மேற்படி ஒஸ்லோ கூட்டத்தில் பங்குபற்றுவதா என்பது குறித்து தீர்மானிப்பதென புலிகளின் தலைமை முடிவு செய்திருக்கின்றதாக நம்பிக்கையாக அறியவந்தது.

கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு பற்றி ஆராய்வதற்கான கூட்டத்தில் இலங்கை அரசுத் தரப்புடன் பங்குபற்றுவதற்கு புலிகள் இந்தக் கட்டத்தில் இணங்கினால் -

அதையே அமைதிப் பேச்சுக்கு புலிகள் இணங்கிவிட்டார்கள் என்ற மாயையாகக் காட்டி அதன் மூலம் இணைத் தலைமைகளின் கூட்டத்தில் வைத்து அதிக கடன் மற்றும் நிதி உதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்பாக இலங்கை அரசுத் தரப்பு பயன்படுத்திக் கொள்ளலாம் எனப் புலிகளின் தலைமை சந்தேகிப்பதாகவும் கூறப்படுகின்றது.

தவிரவும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இணைத் தலைமை நாடுகளின் தீர்மானங்கள் புலிகளைப் பொறுத்தவரை பெரும் பாதகமானவையாகவும், மோசமானவையாகவும் அமையுமானால் கண்காணிப்புக் குழு தொடர்பான உத்தேச ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றுவது பற்றிய புலிகளின் முடிவு வேறு விதமாக அமையக் கூடும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(உ)

# அமைதி முயற்சிகளை சீர்குலைப்பதன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று சந்தித்து தற்போதைய நிலைவரம் தொடர்பாக நீண்டநேரம் கலந்துரையாடியிருக்கின்றோம். நேற்றைய நாள் சிறப்புத் தூதுவர் ஸ்ரீலங்காவின் அரச தலைவரைச் சந்தித்தது பற்றியும் அரசின் நிலைப்பாடு பற்றியும் எடுத்துக்கூறினார்.

நாம் எமது தரப்பு நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்றோம்.

எமது தாயகப் பிரதேசத்தில் மிக மோசமாக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள படுமோசமான படுகொலைகள் தொடர்பாகவும் யுத்த கால நெருக்கடிகளைப் போலவே ஸ்ரீலங்காப் படைகள் எமது மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

படுகொலைகள், பொருளாதாரத் தடைகள் ஆகியவற்றை ஸ்ரீலங்காப் படைகள் ஏற்படுத்தியுள்ளன.

போர்ச்சூழலை அரசும் படைகளும் ஏற்படுத்திக்கொண்டிருப்பதை நோர்வேயின் சிறப்புத் தூதுவருக்கு விரிவாக எடுத்து விளக்கி கூறியிருக்கின்றோம்.

அதே நேரம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஒருதரப்பு நியாயங்களை மட்டுமே சர்வதேச சமூகம் கருத்தில் எடுத்துக்கொண்டு தீர்மானங்களையோ, நிலைப்பாடுகளையோ எடுப்பது என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் - தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையிலும் ஒரு பக்கச்சார்பான நடவடிக்கையாகவே கருதப்படும்.

அமைதி முயற்சிகளை ஓரங்கட்டி ஒரு பலவீனமான நிலைக்குத் தள்ளும் என்ற அச்சத்தையும் இன்றைய சந்திப்பில் வெளிப்படுத்தியுள்ளோம்.

கேள்வி: ஸ்ரீலங்கா அரசிடமிருந்து ஏதாவது 'செய்திகள் எடுத்துவரப்பட்டதா?

பதில்: ஸ்ரீலங்கா அரசிடமிருந்து எதுவித செய்திகளும் கொண்டுவரப்படவில்லை. விரைவாக டோக்கியோவில் இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். அதற்கு முன்னர் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடும் நோக்கோடுதான் இன்றைய சந்திப்பில் சிறப்புத் தூதுவர் கலந்து கொண்டதாக உணரமுடிகின்றது.

கேள்வி: ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்தால்தான் பேச்சுக்கு புலிகளைக் கொண்டு வரமுடியும் என்று ஸ்ரீலங்கா அரச தலைவர் கூறியிருப்பது தொடர்பாக தங்களின் கருத்தென்ன?

பதில்: ஸ்ரீலங்கா அரச தலைவரின் சதி முயற்சிகளில் இதுவும் ஒன்று. பேச்சுவார்த்தைகளை முடக்கி அமைதி முயற்சிகளை சீர்குலைத்து யுத்தத்தையும் இன அழிப்பு நடவடிக்கையையும் தமிழர் தரப்பு மீது ஏவிவிடுவதற்கான ஓர் அங்கமான செயற்பாடாகத்தான் எம்மால் இதைக் கருதமுடிகின்றது.

ஏனெனில் ஐரோப்பிய ஒன்றியத்தைக் கொண்டு தடை செய்வது என்பது சர்வதேச அளவில் தமிழர் தரப்பு நியாயங்களை இல்லாமல் செய்து உண்மைகளை மறைத்து தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை இலட்சியங்களை கொச்சைப்படுத்தி, பலவீனப்படுத்தி தமிழ் மக்கள் மீது ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை திணித்து விடுவதற்கான சர்வதேச சமூகத்தின் மத்தியில் பிழையான பரப்புரைகளைச் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழர் தரப்பையும் ஓரங்கட்டும் நடவடிக்கைதான் இது.

எந்தவிதத்திலும் பேச்சுவார்த்தைக்கு கொண்டுசெல்வதற்கான முயற்சியாக தடையமையாது. பேச்சுவார்த்தை முயற்சிகளை சீர்குலைக்கின்ற செயற்பாடாகவே இந்தத் தடைகளை தமிழர் தரப்பு பார்க்கின்றது.

கேள்வி: ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேச தடைதொடர்பாக ஏதாவது கலந்துரையாடப்பட்டதா?

பதில்: நாம் நோர்வேக்கு எடுத்து விளக்கியிருக்கின்றோம். நோர்வேக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது. அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேத் தரப்பானது தமிழர் தரப்பு நியாயங்களையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்குகின்ற பொறுப்பையும் கொண்டுள்ளது. சிறிலங்கா அரசாங்கம் "அரசு" என்ற சந்தர்ப்பத்தையும் ஒரு தலைபட்சமான தமது நியாயங்களை எடுத்து விளக்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையிலும் தமிழ் [illegible] யிலும் வாய்ப்புக்கள் [illegible]

உடன்பாட்டிற்குள்ளோ அமைதி முயற்சிகளுக்குள்ளோ சர்வதேச சமூகம் இருதரப்பையும் சமமாக மதித்து சமதரப்பாக ஏற்றுக்கொண்டு அமைதி முயற்சிகளுக்குள் ஈடுபடுத்திக் கொண்டதன் காரணமாகத்தான் தமிழர் தரப்பும் அமைதி முயற்சிகளுக்குள் தமது ஆர்வத்தைக் காட்டியது.

இதிலிருந்து சர்வதேச சமூகம் விலகிக் கொள்வதோ நழுவிக்கொள்வதோ என்பது அமைதி முயற்சிகளை முற்றாக சீர்குலைக்கின்றதாகவே எம்மால் கருதமுடியும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையென்பது தமிழர் தரப்பின் நம்பிக்கையீனத்தைதான் உருவாக்கும். சமாதான முயற்சிகளைக் குலைத்துவிடும் என்பதுதான் உண்மை என்பதை சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

கேள்வி: ஜெனீவாப் பேச்சுக்குச் செல்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதா?

பதில்: ஜெனீவாப் பேச்சுக்கு தொடர்ந்து அழைப்பு விடுத்துக்கொண்டே இருக்கின்றார்கள். எமக்கிருக்கின்ற நெருக்கடிகள் தொடர்பாக எடுத்து விளக்கினோம். தமிழர் தாயகப் பிரதேசத்தில் மிகமோசமாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற படுகொலைகள், வன்முறைகள் இவற்றுக்கு முடிவைக்கொண்டு வருவதோடு மத்திய குழுவை எமது தலைமைப்பீடம் கூட்டி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

இதற்கான தடைகளையும் சீர்செய்ய வேண்டும். இந்நிலைமையைத்தான் இன்றும் சுட்டிக்காட்டினோம்.

கேள்வி: முடிவுகள் ஏதாவது எடுக்கப்படவில்லையா?

பதில்: கடல் விமானத்திற்கூடாக தளபதிகள் பயணிப்பது தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பாக ஆராய்ந்துதான் முடிவுகள் எடுக்க முடியும்.

கேள்வி: அடுத்த மாதம் 8, 9ஆம் நாள்களில் பேசுவதற்கு முடிவு செய்யப்பட்டதா?

பதில்: அடுத்த மாதம் பேசுகிறோம். ஆனால் அது ஜெனீவாப் பேச்சுக்கள் அல்ல.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கண்காணிப்புகுழு செயற்படுவது தொடர்பாக நோர்ட் [illegible] பிரதிநிதிகள் கலந்துரையாடவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் கலந்துகொள்ளுமாறு நோர்வேத் தரப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர். அது தொடர்பாக எமது தலைமைப்பீடம் பரிசீலனைக்கு எடுத்துள்ளது.

கேள்வி: கலந்துகொள்வீர்களா?

பதில்: ஓரிரு நாள்களுக்குள்தான் தீர்க்கமான முடிவினை எடுப்போம்.

கேள்வி: போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசிற்கும் தங்களுக்கும் புதிய ஆலோசனைகளை வழங்கியுள்ளது இது தொடர்பாக தங்களின் கருத்தென்ன?

பதில்: போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் எமக்கு எதுவித ஆலோசனை எதுவும் தரப்படவில்லை. இரு சமதரப்பினுடைய நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு நடைமுறைகள் வரவேண்டும்.

ஸ்ரீலங்காவினுடைய கடற்கலங்களில், வான் கலங்களில் ஏறி கண்காணிப்புச் செய்வது போல தமிழீழ விடுதலைப் புலிகளின் கலங்களிலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பணியாற்ற வேண்டுமென்பது உடன்படிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. அந்த உடன்பாடு இருதரப்புக்கும் பொருந்தும் வகையில் எமது தரப்பு பரிசீலிக்கும்.

கேள்வி: ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை வந்தால் அது எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும்?

பதில்: யுத்தநிறுத்த ஒப்பந்தம் உட்பட சமாதான முயற்சிகள் அனைத்தும் முற்றாகப் பாதிக்கப்படலாம் - என்றார்.

## திருத்தம்

27.05.2006 ஆம் திகதிய உதயனின் 6ஆம் பக்கத்தில் பிரசுரமான அமரர் சிவராசா மயூரனின் அந்தியேட்டிக் கிரியை அழைப்பு தொடர்பான விளம்பரத்தில் **Dr.சிவலிங்கம் வைத்தியசாலை** என்பது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக **ஈ.ஞு.சிவலிங்கம் வைத்தியசாலை** என்று தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# சிங்களத் தீவிரப் போக்கின் பிடிக்குள் சிக்கியுள்ள மஹிந்தர்

**போர்** விளிம்பில் சிக்கித் தவிக்கிறது இலங்கைத் தீவு. கொடூர யுத்தம் எந்நேரமும் வெடிக்கலாம் என்ற ஆபத்து நிலைமை.

அமைதி முயற்சிகள் அடியோடு குழம்பி, நான்கரை வருட யுத்தநிறுத்தம் முற்றாக முறிந்து, இனப்போருக்குள் நாடு மீண்டும் மூழ்கும் அந்தகார நிலை வெகுதூரத்தில் இல்லை என்பது உணரப்பட்டு வருகின்றது.

தென்னிலங்கைச் சிங்கள அரசின் ஆட்சியதிகாரம், தீவிரப் போக்குடைய பௌத்த, சிங்களப் பேரினவாத சக்திகளின் பின்புல உதவியோடு தேர்தல் களத்தில் இறங்கிய மஹிந்த ராஜபக்ஷவின் கைகளுக்கு மாறி ஆறு மாதங்களாகிவிட்டன.

அமைதி முயற்சிகள் சீர்குலைந்து, இன முரண்பாட்டு முறுகலின் உச்சத்துக்கு நாடு தள்ளப்பட்டது இந்த ஆறு மாதகால அரச நிர்வாகத்தின் மோசமான நடவடிக்கைகளினால்தான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் பட்டவர்த்தனமாக இதை நாடாளுமன்றத்தில் போட்டு உடைத்திருக்கின்றார்.

அமைதி முயற்சிகளுக்கு எதிரான அரசியல் சக்திகள் இராணுவத்துடன் கைகோர்த்துக்கொண்டு அட்டூழிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்று அப்பட்டமாகக் குற்றம் சுமத்திய இரா. சம்பந்தன் எம்.பி, இந்தச் சக்திகளையோ, இராணுவத்தையோ கட்டுப்படுத்தும் வல்லமையோ, திராணியோ அரசுத் தலைமைக்கு இல்லவே இல்லை என்பதையும் போட்டுடைத்திருக்கின்றார்.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் கடந்த சில மாதங்களாக அரச படைகளின் புலனாய்வுப் பிரிவு வழிநடத்தலில் இயங்கும் துணைப் படைகளும், ஒட்டுக்குழுக்களும் புரிந்த வன்முறைகளை - தமிழ் மக்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் போன்றோருக்கு எதிராகப் புரியப்பட்ட கொடூரங்களை - சபையில் பட்டியலிட்ட சம்பந்தன், அவை குறித்து ஒவ்வொரு தடவையும் ஜனாதிபதி மஹிந்தரிடம் தாங்கள் நேரில் முறையிட்ட போதெல்லாம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டமையையும், ஆனால் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்ததைத் தவிர, அவற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் ஏதும் இடம்பெறவில்லை என்பதையும் நாடாளுமன்றத்தில் விலாவாரியாக விவரித்திருக்கிறார்.

அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்துவதற்குத் தேவையான - அத்தியாவசியமான - நடவடிக்கைகளை எடுக்கும் பற்றுறுதியோ அல்லது திடசங்கற்பமோ அல்லது உளத் தூய்மையோ ஜனாதிபதி மஹிந்தரின் தலைமைக்கு இருக்கின்றதா என்ற சந்தேகம் ஒருபுறமிருக்க, அத்தகைய நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரமும், செல்வாக்கும், திராணியும், வலுவும் முதலில் அத்தலைமைக்கு உள்ளதா என்ற கேள்வியே இன்று முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கைத் தீவின் அரசியல் போக்கையும், நடைபெறும் சம்பவங்களையும், அரசியல் தலைவர்களின் பகிரங்கக் கருத்துக்களையும் சுதந்திரமாக அவதானிக்கும் அரசியல் நோக்கர்களின் மனதில் இந்தக் கேள்விதான் இப்போது இயல்பாக எழுகின்றது. இதையே பழுத்த - மூத்த - தமிழ் அரசியல்வாதியான இரா.சம்பந்தனும் தமது அவதானிப்புகளின் ஊடாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

கொழும்பில் இராணுவத் தலைமையகத்திற்குள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இராணுவத் தளபதிதான் அந்தத் தாக்குதலின் இலக்கு என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம். அதி உச்ச பாதுகாப்பில் உள்ள இராணுவத் தலைமையகத்திற்குள் இராணுவ இலக்கைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக திருகோணமலையில் தமிழ் சிவிலியன்கள் வாழும் பிரதேசத்தின்மீது கண்மூடித்தனமான விமானக்குண்டுவீச்சுக்கு உத்தரவிடப்பட்டது.

இராணுவ இலக்கின் மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக சிவிலியன் நிலைகள் மீது வான் தாக்குதல் நடத்துவதற்கு மஹிந்தரின் அரசுத்தலைமை உத்தரவிட்டதே தனது வேறு கூட்டுச்சக்திகளைச் சமாளித்து, சரிசெய்யும் ஒரு செயற்பாடே என்று பலரும் சுட்டிக்காட்டினர்.

படைத்தரப்பின் அதிகாரப் பிடிக்குள்ளும் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் அரசியல் பிடிக்குள்ளும் சிக்கித் தவிக்கும் ஜனாதிபதி மஹிந்தரால் சுயமாகச் சிந்தித்து நாட்டின் நல்லது, கெட்டதை சீர்தூக்கிப்பார்த்து தீர்மானித்து, அதன்படி செயற்படுத்தப்படவேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது இனிமேல் இயலாத காரியம் என்றே படுகின்றது.

தீவிரப் போக்குடைய சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் நீரோட்டத்தில் அள்ளுப்பட்டு, இழுபட்டுச் செல்லும் ஒரு தென்னிலங்கைத் தலைவரினால் சமாதான முயற்சிகளை - அமைதி நடவடிக்கைகளை - இணக்கப் பேச்சுமூலம் நிரந்தர, நிலையான, நீடிக்கக்கூடிய நியாயமான தீர்வைத்தரக்கூடிய திசையில் முன்கொண்டுசெல்ல முடியுமென நம்புவதற்குத் தமிழர்கள் இனிமேலும் தயாரில்லை.

சிங்களத் தீவிரவாதிகளின் விருப்புக்கும், இசைவிற்கும் எதிர்பார்ப்பிற்கும் அமைவாகச் செயற்படும் ஜனாதிபதி மஹிந்தர், தமது அந்த நடவடிக்கைப் போக்கு மூலம் அமைதி முயற்சிகளுக்கான வாய்ப்புகளை - கதவுகளை - நிரந்தரமாக மூடப்போகின்றார் என்பது தெளிவாகி வருகின்றது.

# நான்கு வருடகால சமாதானம் போதும் இனியும் ஏமாந்துகொண்டிருக்கமுடியாது

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே28

சமாதானம் என்ற மாயைக்குள் கடந்த நான்கு வருடங்கள் கழிந்தது போதும். இனியும் நாம் ஏமாறமுடியாது என்று தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் தெரிவித்துள்ளது.

மக்களே யுத்தத்துக்குத் தயாராகுங்கள் என்ற தலைப்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த நான்கு வருட சமாதான காலத்தில் ஸ்ரீலங்கா அரசும், சர்வதேச சமூகமும் எமக்கு எதனையும் பெற்றுத்தரவில்லை. மாறாக சமாதானத்தைப் பயன்படுத்தி எமது இனத்தைப் பலவீனப்படுத்தி முற்றாக அழிக்கும் முயற்சிகளிலேயே ஈடுபட்டன.

ஆனால், எமது தலைவரின் தூரநோக்கினால் நாம் காப்பாற்றப்பட்டு இன்னும் மிகப்பலமான நிலையிலேயே உள்ளோம். இதனைப் பொறுக்கமுடியாமல் இன்று சர்வதேச நாடுகளை எமது பிரதிநிதிகள் மீது தடைபோடுமாறு ஸ்ரீலங்கா அரசு வற்புறுத்திவருகின்றது. சர்வதேச சமூகம் ஸ்ரீலங்கா அரசின் கதைகளுக்கு எடுபட்டு தமிழ் மக்களின் உண்மையான நிலையினைப் புரியாமல் தமிழினத்தின் சுயநிர்ணயம், தாயகம், தன்னாட்சி கொள்கைகளுக்கு மாறாகச் செயற்பட்டு தடைகளைப் போட முயற்சிக்கின்றது.

சமாதான காலம் இன்று சண்டைக் காலமாக மாறக் காரணமாயிருந்தது யார்? சமாதான காலத்தில் முன்வைக்கப்பட்ட சிரான் கட்டமைப்புக்கான திட்டவரைபு, இடைக்கால திட்டவரைபு, மனிதாபிமான பொதுக்கட்டமைப்பு அனைத்திற்குமே தடைபோட்டு சமாதானத்தைக் குழப்பியது. ஸ்ரீலங்கா அரசும் நீதிமன்றமுமே என்பது வெளிப்படை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து, இன்றும் உயர்பாதுகாப்பு வலயங்கள், கடல் தடை, பயணத்தடை என தடைகளைப் போட்டு சமாதான முயற்சிகளைக் குழப்புவது யார் என்பது எம் அனைவருக்கும் தெரிந்த உண்மை.

இறுதியாக ஜெனீவா முதலாம் சுற்று பேச்சில் இணங்கிய விடயங்களை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து துணை இராணுவக் குழுக்களுக்கு மேலும் ஊக்கமளித்தது யார் என்பது எமக்குத் தெரியும்.

இன்று கடந்த நான்கு மாதங்களிலும் எமது முந்நூற்றுக்கும் மேற்பட்ட உறவுகள் வீதிகளிலும் வீடுகளிலும் வைத்து பிஞ்சும் பூவுமாய் சிங்களப் படைகளால் சுட்டு அழிக்கப்பட்டுவிட்டன. மாமனிதர் விக்னேஸ்வரன் தொடக்கம் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், கேணல் ரமணன் உட்பட நூற்றுக்கணக்கான போராளிகளையும் இன்றுவரை இழந்துவிட்டோம். நாற்பதினாயிரத்துக்கும் அதிகமான எமது உறவுகள் கடந்த நான்கு மாதத்தில் இடம்பெயர்ந்து அகதிகளாய் அல்லற்படுகிறார்கள்.

இன்று செய்வதையெல்லாம் செய்து சமாதானத்திற்குச் சாவுமணி அடித்துவிட்டு விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவர அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேசத்திடம் ஸ்ரீலங்கா அரசு கேட்கிறது. பேச்சு நடத்த விடுதலைப் புலிகள்தான் வரவில்லை எனக் குற்றம் சாட்டுகின்றது. எனவே, இந்த ஏமாற்று வித்தைகளுக்குப் பணிந்து போகுமளவிற்கு தமிழ் மக்கள் முட்டாள்கள் அல்ல என்பதை உணர்ந்து இன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் பயிற்சி எடுக்கத் தொடங்கிவிட்டனர்.

எனவே, யாழ். குடாநாட்டு உறவுகளே, சமாதானம் என்ற மாயைக்குள் கடந்த நான்கு வருடங்கள் கழிந்தது போதும். இனியும் நாம் ஏமாற முடியாது. யாழ். குடாநாடு மீட்கப்பட்ட நிலையிலேயே சமாதானப் பேச்சுகள் சாத்தியப்படும். எனவே, அனைவரும் எதிரியுடன் யுத்தத்திற்குத் தயாராகுங்கள். இல்லையெனில், இன்று புத்தூர், நவிண்டில், மந்துவில், அல்லைப்பிட்டி போன்று நாளை வீதிகள் தோறும், வீடுகள் தோறும் நாம் ஆயிரக்கணக்கில் எதிரியால் அழிக்கப்படுவோம். இதனைத் தடுக்க வேண்டுமெனில் உங்கள் வீட்டுப் படலையில் நிற்கும் சிங்களப் படைகளுக்கு நீங்கள் பாடை கட்டவேண்டும். அதற்காக உங்களை உடன் தயார்ப்படுத்துங்கள். இளைஞர், யுவதிகளே தனித்தனியே, கூட்டாக விரைந்து கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று பயிற்சி பெறுங்கள். உங்கள் கைகள் பலம் பெறட்டும். உங்கள் வீட்டுப்படலை தோறும் நிற்கும் எதிரிப் படைகளுக்கு உங்கள் கைகளே பாடை கட்டட்டும். எதிரி அஞ்சி, பயந்து தன்னூர் போய்ச் சேரட்டும். எமது விடுதலை எமது கைகளிலேயே! விரையுங்கள் விடுதலைக்காய் - என்றுள்ளது.

# டோக்கியோ, ஒஸ்லோ உடன்பாட்டின்படி சமாதானத்தை நகர்த்தினால் ஒத்துழைப்பு!

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, மே 28

டோக்கியோ, ஒஸ்லோ உடன்படிக்கைகளுக்கமைய எடுக்கப்படும் அமைதித் தீர்வுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். இன்று ஜே.வி.பி. மற்றும் அரச பங்காளிக் கட்சிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் கொழும்பின் பாதுகாப்பே கேள்விக் குறியாகியிருக்கிறது.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கருத்துவெளியிட்டார் ஐக்கியதேசியக்கட்சியின் பிரதிப்பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் வன்முறைகள் குறித்தான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. அரசாங்கத்தின் நேச அணிகள் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கடுமையாக விமர்சித்தாலும், ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டிருக்கின்றார் என்றும் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர்தான் நாட்டில் ஒரு அமைதி நிலைமை ஏற்பட்டது. இப்போது அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்கவேண்டுமென்று ஜனாதிபதி கூறி வரும் போது அவருடன் இருக்கும் நேச சக்திகள் நோர்வே அனுசரணையாளர்களைக் கண்டபடி விமர்சித்து வருகின்றன.

ஐக்கிய தேசியக்கட்சி குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. அமைதி முயற்சிகளை நாம் ஆதரிக்கின்றோம். டோக்கியோ, ஒஸ்லோ தீர்மானங்கள் அடிப்படையிலான தீர்வுக்கு நாம்முழு ஆதரவை வழங்குவோம் - என்றார்.

# வடக்கு - கிழக்கு படுகொலைகள் உடன் தடுத்து நிறுத்தப்படவேண்டும்

## ஜனாதிபதி மஹிந்தவிடம் புதிய ஜனநாயகக்கட்சி வலியுறுத்து

கொழும்பு,மே28

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் கொடூரமான படுகொலைகள், ஆள் கடத்தல்கள், அச்சுறுத்தல்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் - தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

குறிப்பாக, ஆயுதப்படைகளுக்கான கட்டளையிடும் உயர் அதிகாரத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி, இது விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது புதிய ஜனநாயகக் கட்சி.

இது தொடர்பாக கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல், தேசிய அமைப்பாளர் இ.தம்பையா ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கில் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக நாளாந்தம் படுகொலைகள், ஆள்கடத்தல்கள் இடம்பெற்றுவந்துள்ளன. இந்நிலை மேலும் மேலும் மோசமடைந்தே செல்கின்றது. இந்தப் படுகொலைகளில் அரசின் ஆயுதப்படைகள், துணைப்படைகள், கருணா குழுவினர் என்போர் சம்பந்தப்பட்டிருப்பது பகிரங்கமானதாகும்.

ஆயுதப்படைகளுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்களைத் தொடர்ந்து இடம்பெறும் எதிர்த்தாக்குதல்கள் பழிவாங்கும் படுகொலைகளால் ஒன்றுமறியாத சாதாரண மக்கள் அச்சம், பயப்பீதியுடனேயே அன்றாட வாழ்வைக் கழிக்கவேண்டியுள்ளது. இதனால், இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டு வருவதுடன் மக்கள் மீண்டும் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியும் வருகின்றனர்.

அத்துடன், சமூக அக்கறையாளர் அரசியல் கருத்துடையோர், பத்திரிகையாளர்கள் போன்றோர் கொலைகளுக்கு ஆளாக்கப்பட்டு, வருவதுடன் தொடர்ந்தும் ஆயுதப்படைகளால் அச்சுறுத்தப்பட்டு எந்நேரமும் உயிராபத்து வரலாம் என்ற பீதியுடனேயே இருந்தும் வருகின்றனர்.

இந்த வகையில், எமது புதிய ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் குறிப்பாக கட்சியின் வட பிரதேச செயலாளர் ஆகியோர் அச்சுறுத்தல் மத்தியிலேயே இருந்து வருகின்றனர். இவ்வாறு இயல்பு வாழ்க்கை சீர்குலைந்து அச்சமும் பதற்றமும் நீடித்து வரும் சூழலில் அன்றாட உழைப்பாளர்களான தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் பாரிய வாழ்க்கைச் சுமைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகி வருகின்றனர். உயிர்வாழ்வதற்கும் தமது அன்றாட அலுவல்கள் கடமைகளைச் செய்வதற்கும் முடியாத சூழலுக்குள்ளும் இருந்து வருகின்றனர்.

ஆதலால், இந்நிலைமையை மாற்றுவதற்கும் மக்கள் அச்சம் 'பீதி' பதற்றமற்ற சூழலில் வாழ்வதற்கும் உள்ள உரிமையை உறுதிப்படுத்த தாங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதையே எமது கட்சி தங்களிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது.

## நாளை

வைகாசி 15
திங்கட்கிழமை
29.05.2006
திதி : துதியை
முற்பகல் : 10.23
நட்சத்திரம் : மிருகசீரிடம்
முற்பகல் : 08.25
சுபநேரம் : 11.52 - 01.22
ராகுகாலம் : 07.22 - 08.52

## உதயவாக்கு

மனம் சுத்தமானதாக இருந்தால் வெற்றிவழியில் செல்லும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கலாபூஷணம் சிற்பச்சக்கரவர்த்தி
**ஆறுமுகம் ஜீவரட்ணம்** அவர்கள்
தோற்றம் : 16 - 08 - 1938
மறைவு : 24 - 05 - 2001

தேர்க் கலையின் வேந்தே!
திருப்பொலிய வாழ்ந்தவனே!
சிற்பக் கலையின் சிகரத்தில்
வீற்றிருந்து
அற்புதமாய்க் கைவண்ணம்
காட்டிநின்ற தேர் அரசே!
நீ மறைந்து
ஆண்டுகள் ஐந்து
ஓடி மறைந்தாலும்
ஆலயத்து வீதிகளில்
தேர் அசைந்து வருகையிலே
உன் திருப்பெயரும் கூடவரும்.

குடும்பத்தினர்.
ஆறுமுகம் சிற்பாலயம்,
காளிகோயிலடி, திருநெல்வேலி.
(50603) (23.16.14.26)

## பௌதிகவியல் இணைந்தகணிதம்

பிரபல கல்லூரிகளில் கற்பித்து பல வருட அனுபவம் பெற்ற ஆசிரியரால் மேற்படி பாடங்கள் ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட வினாத் தாள் உட்பட 3000 இற்கு மேற்பட்ட MCQ விளக்க விடைகளுடன் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையில் கற்கும் மாணவர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் முழுப்பாடத்திட்டமும் முடித்துக்கொடுக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. வகுப்புகள் நடைபெறுகின்றன.

R.பாலசுப்பிரமணியம் B.Sc.(cey.) ( Dip. in Ed.).
17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.077 6648751
(50604)

## இந்தியாவில் கல்வி

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன்
இணைந்த பிருந்தாவன் கல்லூரி

A/L 2 பாடங்கள் OR A/L முடிவுகள் எதிர்பார்த்தல்

B.Sc.
B.B.A.
B.C.A
B.Com.

கற்கைநெறிகள் ஜுலை இறுதியில் ஆரம்பமாகும்.

**Company Secretarial Services (Pvt) Ltd.**
285 C-1/1, stanley Tillakaratna Mw, Nugegoda.
For Details Tel : 0777-317045
(சி/49437) (32.11.14)

## வான் விற்பனைக்கு

57-XXXX இலக்கம் உடைய நல்ல நிலையில் உள்ள வான் விற்பனைக்கு உண்டு (automatic gear).

தொடர்பு: M.C.செல்வதாஸ்,
அந்தோனியர் வீதி,
பருத்தித்துறை.
தொ.பே.077 6993800 (50550)(26.11.14)

## தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல விடுதி (லொட்ஜ்) ஒன்றுக்கு முகாமையாளர், உதவியாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. தங்குமிடம், உணவு வசதி செய்துதரப்படும். மும்மொழிகளும் தெரிந்தவர்கள் விரும்பப்படுவர். தகுதியானவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

Human Resources Manager,
177, old moor street,
Colombo - 12
(50491) (32-15-14)

## மலிவு விலையில் (VNC) கொங்கிறீற் கற்கள்

எரிபொருள் விலை ஏற்றம், பொருள்கள் விலைவாசி உயர்வு, சிமெந்து மணல் வகைகள் தட்டுப்பாடு இவற்றிற்கு மத்தியிலும் தரமான கொங்கிறீற் பொருள்களை எந்தவித தட்டுபாடுமின்றி பழைய விலையிலேயே வழங்கி வருகின்றோம். தண்ணீரில் ஊறவிடப்பட்டு விற்பனை செய்யப்படும். 1 அடி நீள 4" அகல கொங்கிறீற் கல் ஒன்றின் விலை 29/= மட்டும். இவற்றுடன் 2" அகல கொங்கிறீற் கற்கள், 3" அகல கொங்கிறீற் கற்கள், கம்பிவேலித் தூண்கள், கொட்டில் தூண்கள், பிளாற் வகைகள் உங்கள் தேவைக்கேற்ற வண்ணம் உங்கள் விருப்பப் பிரகாரம் செய்து கொடுக்கப்படும். கற்கள் அறுக்கப்படுவதை நேரடியாக பார்வையிட்டு முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுச் செல்லவும்.

T.P :- 077 3621328
077 9595066
VNC கும்பழாவளை,
பிள்ளையார் கோவில் சதுக்கம்,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.
(50586) (26.11.14)

## இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இல்லறத்தில் இணையும் தம்பதிகள்



அச்சுவேலியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இன்று (28.05.2006) இல்லறத்தில் இணைந்து கொள்ளும் அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சிவகுமார் ஜெயவாணி தம்பதியினர் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகின்றோம்

தொ.பே. 060 2212431
0773053080 (சி.49431)(23.11.14)
- வீடியோ கலாமினி, அச்சுவேலி.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 14 - 09 - 1941
உதிர்வு 21 - 04 - 2005



**தாமன் சதாசிவம்**

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் - வாழ்ந்த
எங்கள் ஒளிவிளக்கு எங்கு சென்றாலும்
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
மாறிடுமோ நம் பாசம்.

அண்ணாசிலையடி,
கரணவாய். (50589)(32.26.11.14)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பஞ்சாட்சரம் பரமேஸ்வரி



(ஓய்வு பெற்ற சிறைச்சாலை ஊழியர்)

பஞ்சாட்சரம் பரமேஸ்வரி அவர்கள் 23.05.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைராசா- செல்லம்மா அவர்களின் அன்பு மகளும் சோதிநாதன் (சின்னக்கிளி-லண்டன்), காலஞ்சென்ற யோகராசா, சிவநாதன் (செல்வம்), சிவானந்தன் (ஜீவா-லண்டன்), சிவகுமார் (சாந்தன்-லண்டன்), திருமதி புஸ்பகௌரி ஆகியோரின் அன்புத் தாயும் இந்திராணி, புவனேஸ்வரி, சிவதேவகி, யசோ, கலைச்செல்வி, முத்துச்சாமி ஆகியோரின் அன்பு மாமியும் திருமதி எஸ்.நந்தினி, சுகந்தன், திருமதி தர்சினி, பிரதீபன் (குகன்),புவனராஜன், புஸ்பராஜன், திலகராஜன், கோகிலராஜன், கிருஸ்ணராஜன், சிவவிஜி, சிவசங்கர், சிவரம்யா, சிவறாகவன், மிருதுளா, மிருதுளன், சாருகா, டிவர்சன், நிருஜன், விஸ்ணுதன், பிரியா, பிரியதர்சினி, பிரியலோஜினி ஆகியோரின் பேர்த்தியும் சாரங்கா, மிதுஸ், சிறீமன், கரிஸ்ராகவன், சௌபர்ணிகா, ரிஸிதரன், ரிஸ்மிகா ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்ற சண்முகராஜா, காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் சுந்தரலிங்கம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/11,சந்தன மாதா கோயில்
முன் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை.
தகவல்:
பிள்ளைகள்.
(சி.49428) (39.11.14.26)

### இராசலிங்கம் பவளம் (ராசாத்தி)



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் பவளம் 25-05-2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர்-செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் கேமா, மாலா, சுகந்தன், றமா, சசி ஆகியோரின் அன்புத் தாயும் நகுலேந்திரன், விமலேந்திரன் ஆகியோரின் மாமியும் யனு, நிக்ஷன், றேனு, சந்தோஸ், டிசாந் ஆகியோரின் பேர்த்தியும் கணேஷ், நவரட்ணம் காலஞ்சென்ற ராசா, மணி, கனகம்மா, குழந்தை, பேபி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-05-2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
தாவடி [illegible]
தொ.பே.0[illegible]
தகவல்:
[illegible]

அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு
றோயல் குளுக்கோஸ்
100 % சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By: ROYAL INDUSTRIES COLOMBO-12 ☎0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
☎ 021 222 2567
100g றோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90

## பெண் பராமரிப்பாளர்கள் தேவை

நல்லூர்/யாழ்ப்பாணத்தில் இயங்கும்
பெண்கள் சிறுவர் இல்லத்திற்கு
பெண் பராமரிப்பாளர்கள் தேவை.
(வயதெல்லை 25-45)

தொடர்பு முகவரி:
"நாற்சதுர சுவிசேஷசபை",
241, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.021 222 6730
-நிர்வாகி.
(50595)(26.11.14)

**Computer Hardware Free Workshop**

ஒரு வார கால முழுநேர இலவச கற்கைநெறி

உங்களுக்காக 100% செய்முறைப் பயிற்சியினுடனான ஒரு வார குறுகிய கால Hardware கற்கைநெறி ஆரம்பமாகின்றது.

ஆரம்பம்:- 29.05.2006 காலை 11.00 மணி

- Assembling
- Upgrading
- Troubleshooting
- Repairing
- Software Installation

அனுமதிக் கட்டணம் மட்டும்!

ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக இக் கற்கைநெறி அமைகின்றது.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வு கூடத்தில் அதிநவீன கணினிகளில் செய்முறைகள் வழங்கப்படும்.

இதில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு எமது நிறுவனத்திலேயே தொழில்சார் வசதிகள் வழங்கப்படும்.

CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

பதிவுகளுக்கு முந்துங்கள்!

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 27 - 10 - 1941



மறைவு 29 - 04 - 2006

**அமரர் சின்னையா பாலசிங்கம்**

(ஓய்வுபெற்ற நடத்துநர், இ.போ.ச. பருத்தித்துறை)

29-04-2006 இல் சிவபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்து, இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு, ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஏனையோருக்கும் எமது நன்றிகள்.

நாளை (29-05-2006) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'முல்லை'
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
-குடும்பத்தினர்.
(50596)(26.11.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சிக் கோட்டத்தில் தெரிவான வீர, வீராங்கனைகள் விவரம்

வட்டக்கச்சி,மே 28

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிக் கோட்டப் பாடசாலை வீரர்களிடையே அண்மையில் நடைபெற்ற 2006 ஆம் ஆண்டுக்கான மெய்வன்மைப் போட்டியில் சிறந்த வீர, வீராங்கனைகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

அவர்களின் விவரம் வருமாறு:-

11 வயதுப் பிரிவு - ஆண் - சி.விதுஷ்யன், கிளிநொச்சி ம.வி., பெண் - ஸ்ரீ.கஜீதா, கிளிநொச்சி ம.வி.

13 வயதுப் பிரிவு - ஆண் - ஐ.ஹரிராம் - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை, பெண் - சொ.கலாஜினி, திருவையாறு ம.வி.

15 வயதுப் பிரிவு - ஆண் - சி.மாதுளன் - அக்கராயன் அ.த.க.பாடசாலை, பெண் - ஸ்ரீ.தசாங்கி - புனித திரேசா பெண்கள் பாடசாலை.

17 வயதுப் பிரிவு - ஆண் - இ.சத்தியரட்ணம், இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை, யோ.ஐங்கரன், வன்னேரிக்குளம் ம.வி., பெண் - க.சரண்யா, இராமநாதபுரம் ம.வி., க.விதுஷா, உருத்திரபுரம் ம.வி.

19 வயதுப் பிரிவு - ஆண் - ஜி.சுரேஷ் கண்ணா, அக்கராயன் ம.வி., பெண் - சீ.தாரணி, அக்கராயன் ம.வி.

21 வயதுப் பிரிவு - ஆண் - பா.அகிலன், கிளிநொச்சி மத்திய கல்லூரி, பெண் - சி. ஸ்ரீமிதுலா, இராமநாதன் ம.வி., எஸ்.ரஞ்சலா, அக்கராயன் ம.வி. (405)

# பன்னங்கண்டிப் பகுதியில் மீண்டும் மண் அகழ்வு: சூழல் பாதிக்கும் நிலை

கிளிநொச்சி,மே28

கிளிநொச்சி பன்னங்கண்டி ஆற்றுப்பகுதியில் மீண்டும் மண் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றமையால் சூழல் பாதிப்படையும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மண் அகழ்வு மேற்கொள்வதற்குப் பிரதேச சபை கடந்த வருடம் தடைவிதித்திருந்தது.

தற்போது மீண்டும் அதே இடத்தில் மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்விடத்தில் மண் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றமையால் பாரிய மரங்கள் சரிந்து விழும் நிலை உருவாகியுள்ளது.

அதுமட்டுமன்றி ஆற்றுக்கருகேயுள்ள விளை நிலங்களும் பாதிப்படையும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. எனவே, உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (307)

# கருவாடு பதனிடுவதற்கான உப்பு போதியளவு கையிருப்பில் உள்ளது

## ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் தெரிவிப்பு

வட்டக்கச்சி,மே28

கருவாடு பதனிடுவதற்கான உப்பு போதியளவு இருப்பில் உள்ளதாக ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கருவாடு பதனிடுவதற்கான உப்புக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், எமது உப்பு உற்பத்தி நிறுவனத்தில் போதியளவு உப்பு உள்ளது. கருவாடு பதனிடுவதற்குத் தேவையான உப்பு உள்ளது.

கருவாடு பதனிடுவதற்குத் தேவையான உப்புத் தேவைப்படுவோர் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் ஊடாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசம், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், பூநகரி ப.நோ.கூ. சங்கம், வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கம் என்பவற்றின் ஊடாக அந்தந்த மாவட்டங்களுக்கு உப்பு விநியோகிக்கப்படுகின்றது - என்றார். (405)

## 13 ஆவது அகவையில் தமிழீழ வைப்பகம்

கிளிநொச்சி,மே 28

தமிழர் தாயகத்தில் தன்னிறைவுப் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிவரும் தமிழீழ வைப்பகம் கடந்த 23 ஆம் திகதி பன்னிரண்டாவது அகவையினை நிறைவு செய்தது.

பதின்மூன்றாவது ஆண்டில் கால்பதிக்கும் தமிழீழ வைப்பகம் யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் தனது முதலாவது கிளையினை ஆரம்பித்து மக்களுக்கான வங்கிச்சேவையினை ஆற்றிய தமிழீழ வைப்பகம் இன்று முல்லைத்தீவு, விசுவமடு, பரந்தன், பூநகரி, மாங்குளம், மல்லாவி ஆகிய இடங்களில் ஊரகக்கிளைகளையும் புளியங்குளத்தில் விரிவாக்கக்கிளையினையும் ஏனைய ஐந்து முதல்தரக் கிளைகளையும் நிறுவி மக்களுக்கான சேவையினை ஆற்றிவருவதுடன் பாடசாலைகள் தோறும் பள்ளிச்சேவை அலகுகளையும் நிறுவியுள்ளது.

# வீதியோரங்களில் மீன் வியாபாரம்: சுகாதாரச் சீர்கேடு என முறைப்பாடு

பரந்தன்,மே28

விசுவமடுப் பகுதியில் வீதியோரங்களில் வைத்து மீன்வியாபாரம் செய்வதால் அங்கு சுகாதாரச் சீர்கேடு நிலவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதியோரங்களில் வைத்து மீன் வியாபாரம் செய்வதனால் வாகனங்கள் செல்லும் போது எழுப்பப்படும் தூசிகள், வாகனப் புகைகள் மீன்களில் படிகின்றன.

இதுமட்டுமன்றி, மீன் வாங்குவதற்கென மக்கள் வீதிகளில் அதிகளவு கூடுவதால் போக்குவரத்துக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்களிடம் தெரிவிக்கப்பட்டபோதும் அவர்கள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் காட்டுகின்றனர் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (352)

# கிளிநொச்சி நகர சந்தையில் சுகாதார சீர்கேடு; மக்கள் பாதிப்பு

பரந்தன்,மே28

கிளிநொச்சியில் நகர சந்தைப் பகுதி சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வருகின்றமையால் அங்கு வருவோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சந்தைப் பகுதியிலுள்ள மலசல கூடம் சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுகின்றது.

அது மட்டுமன்றி இறைச்சி, கோழி என்பவை விற்பனை செய்யப்படும் இடங்களும் துர்நாற்றம் வீசிய வண்ணம் உள்ளன.

சந்தையிலிருந்து அகற்றப்படும் திண்மக் கழிவுகள் ஒழுங்கான முறையில் சுத்தம் செய்யப்படுவதில்லை.

கழிவுநீர் உரிய முறையில் அகற்றப்படாமையால் இலையான்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இக்காரணங்களால் மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய நிலைமை தோன்றியுள்ளது.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து மக்கள் நலன்னைப் பேண முன்வர வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (352)

# வலி.மேற்கில் பல இடங்களிலும் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

வலி.மேற்கு,மே28

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் கட்டாக்காலி நாய்களினால் மாணவர்களும் பொதுமக்களும் பெரும் அவதிப்படுகின்றனர்.

சங்கானை, அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய இடங்களிலுள்ள பொது இடங்களிலும் சந்தைகளிலும் பெரும் எண்ணிக்கையில் கட்டாக்காலி நாய்கள் உலாவுகின்றன.

இந்தக் கட்டாக்காலி நாய்களினால் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாமலும் பொதுமக்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்குச் செல்லமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

பலர் நாய்க்கடிக்குள்ளாகி வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு வலி.மேற்குப் பிரதேச சபையினர் நடவடிக்கைகள் எதனையும் எடுக்காததையிட்டு பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (175)

## பஸ் நடத்துநரைக் காணவில்லையாம்

யாழ்ப்பாணம்,மே28

தனியார் மினி பஸ் நடத்துநர் ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர், சுயம்பு வீதியைச் சேர்ந்த செல்வராஜா சேத்தன் (வயது 20) என்பவரையே காணவில்லை என அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

## நெடுந்தீவுக்கு மேலும் 21 சூரியமின்கலங்கள்

சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேலும் 21 சூரிய மின்விளக்குகளை நெடுந்தீவுக்கு வழங்கியுள்ளது. ஏற்கன்வே 36 சூரிய சக்தி மின்கலங்கள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் வழங்கப்பட்டு வீதிகளுக்குப் பொருத்தப்பட்டிருந்தன.

தற்சமயம் வழங்கப்பட்டுள்ளவையும் ஆலயங்கள் உட்பட வீதிகளுக்கும் பொருத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ். பற்றிக் டிறஞ்சன் எடுத்த முயற்சியை அடுத்தே குறிப்பிட்ட 57 சூரியமின்கலங்களும் நெடுந்தீவுக்குக் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. (111)

# குமுதினிப் படகுச்சேவை மறுநாளே தடைப்பட்டது

நல்லூர்,மே28

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட 'குமுதினி' படகுச்சேவை மறுநாளே இடைநிறுத்தப்பட்டது. 'ரேடியேற்றர்' பழுதடைந்தமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரச பயணிகள் படகான குமுதினியின் 'ரேடியேற்றர்' அடிக்கடி பழுதடைந்து வருகின்றது. இதனால், படகுச்சேவை அடிக்கடி இடைநிறுத்தப்படுகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து புதிய 'ரேடியேற்றர்'களைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுகின்றனர். (111)

# பண்டத்தரிப்பு நூலகத்தில் விரைவில் வாசகர் வட்டம்

வலி.தென்மேற்கு,மே28

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின பொது நூலகத்தில் வாசகர் வட்டம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் விரைவில் நடத்தப்படவுள்ளதாக நூலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இந்த நூலகத்தில் அபிப்பிராயப் பதிவேடு ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. வாசகர்கள் இப்பதிவேட்டில் நூலகம் பற்றிய தமது ஆலோசனைகளையும் கருத்துகளையும் குறிப்பிட்டு எழுதமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (135)



சுவாமி சிவசத்தர் அருளிய கைலைப் புராணம் நூல் வெளியீட்டு விழா அண்மையில் அளவெட்டி திருவடி நிழல் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இதில் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் மங்கள விளக்கேற்றுவதையும் சைவப் புலவர் மு.திருஞா[illegible]வதையும் படத்தில் காணலாம். வெளியீட்டு[illegible] கலாநிதி ஆ.சபாரத்தினம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் கவனத்திற்கு!

யாழ்ப்பாணம்,மே28

மானிப்பாய் சென். ஆன்ற் றோ.க.த.க. பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 11 வரை கல்விகற்கும் மாணவர்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலையில் ஒன்றுகூடுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே28

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்விகற்கும் தரம் 2, 3, 4 மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

வகுப்புகள் காலை 9 மணிதொடக்கம் பி.ப. ஒரு மணிவரை நடைபெறும் எனவும் சகல மாணவர்களையும் சமுகம்தருமாறும் பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

* *

யாழ்ப்பாணம்,மே28

யாழ். கோயில் வீதி கார்மேல் பாலர் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்கான வகுப்புகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் என அதிபர் தெரிவித்துள்ளார்.

## நீர்வேலியில் இராஜகோபுர நிர்மாணப் பணிகள் பூர்த்தி

அரியாலை,மே28

நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கென நிர்மானிக்கப்பட்டுவரும் இராஜகோபுரத்திற்கான கட்டுமானப் பணிகள் யாவும் நிறைவு பெற்றுள்ளன.

கட்டுமானப் பணிகள் யாவும் நிறைவு பெற்றதையடுத்து இராஜகோபுரத்திற்கான மகா கும்பாபிஷேகத்தை ஜூன் மாதம் முற்பகுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (17)

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விய வருடம் 18ஆம் நாள் (01.06.2006) வியாழக்கிழமை 10 மணிதொடக்கம் 11.15 மணிவரையுள்ள பூசநட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சிங்க லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்



திரு. திருமதி நடராசா மேரிதிரேசா அவர்களின் புதல்வன் திருநிறைசெல்வன்

**சசீகரன்** (கரன்) அவர்களுக்கும்

திரு. திருமதி தங்கராசா புஸ்பமலர் அவர்களின் புதல்வி திருநிறைசெல்வி

**சத்தியேஸ்வரி** (சத்தியா) அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்யதாரணம் நடத்த திருவருள் கைகூடி இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றம்சூழ சமுகம் தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து அதன்பின் மணமகள் வீட்டில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சபையைச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவரவும்)

திருமணம் நடைபெறும் மண்டபம்: முத்துமாரி மண்டபம் நாச்சிமார்கோயில், கே.கே.எஸ். வீதி,வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திருமதி நடராசா மேரிதிரேசா
வேலணை மேற்கு,
வேலணை 06. (இருவீட்டார் அழைப்பு)

க.தங்கராசா – புஸ்பமலர்
பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை,
நி.மு.: மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

(50486)(33-24-16-14)




எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

Distributor Eastern Province
Ms Malki Power
Main Street, Maruthamunai,
Tel: 077 3040623, 077 6180567

Sole Agents:
Sari Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்




போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுன்டிக்குழி, யாழ்ப்பாணம்

T.P.: 0777-903090
0777 246117

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கண் மகிழ
25.04.1946

கண் நெகிழ
05.06.2005

**அமரர் குமாரன் தம்பிராசா**
(சின்னவர்)

கனவுக்களையெல்லாம்
நனவாக்கிய
கலங்கரை விளக்கே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
அகலவில்லை உங்கள் நினைவு.

"அறிவாலயம்",
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

-குடும்பத்தினர்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மாவை மண்ணில்
17 - 07 - 1933



விண்ணில்
28 - 05 - 1996

**அமரர் செல்லப்பா சண்முகவடிவேல்**

(மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழை)

ஆண்டுகள் பத்து இங்கே அடுக்கடுக்குச் சென்றாலும்
நீங்காத துயர் தன்னில் நீந்துகிறேன் எந்தயரே!
கண்ணீரில் கரைகின்றேன் கடல்போல துயரமப்பா!
அண்மையில் இருந்திடிலோ அணைத்தேனும் - ஆற்றிடுவீர்
துயர் தன்னை கண்காணா தூரந்தனில்
கரைத்துவிட்ட என் தந்தையே!
கணமேனும் நீங்காது நினைந்தேத்தி மகிழ்கின்றேன்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
தொ.பே.: 0776100280 (50560)(33-16-14)

ச.ராதிகா (யாழ். பல்கலைக்கழகம்)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## Save the Children in Sri Lanka

Restoration of livelihoods to families is a key protection factor for all children affected by the Tsunami. In the aftermath of Tsunami, Save the Children in Sri Lanka engaged into a series of projects through partner organisations and direct implementation aiming to restore community and household economies by replacing productive assets and providing financial support.

We are looking for a committed, energetic and dynamic individual to join our team as a:

### PARTNERSHIP DEVELOPMENT MANAGER – LIVELIHOODS

**Base Station: Jaffna**

The Partnership Development Manager - Livelihoods is responsible for the development, implementation and monitoring of livelihood programmes to achieve SCiSL's objectives, by working closely with communities and local government authorities in the Jaffna district. The incumbent of this position is also expected to provide support to Partner organisations in the development of proposals, budgets and operational plans.

**Only Sri Lankan citizens are eligible to apply for this position.**

**Qualifications & Experience**

**Essential**

1. Graduate degree [preferably Post-Graduate] in Social Sciences or equivalent and/ or 5 years work experience, preferably in the area of livelihoods.
2. Demonstrated experience in direct implementation, developing and managing partnerships with INGOs/NGOs and working with communities, particularly with children.
3. Skills related to participatory research methods (PRA, PLA, RRA), computer literacy in Microsoft Word and Microsoft Excel, financial management and report writing.
4. Experience in project planning, implementation, monitoring and evaluation.
5. Good interpersonal and liaison skills with an excellent command of written and spoken English with fluency in Sinhala/ Tamil.
6. Ability and willingness to travel to all parts of the country.

**Desirable**

1. Experience of working with children and understanding of Child Rights and Child Rights-based approaches to programming.

**The above position would be initially for a period of one year.**

Save the Children in Sri Lanka is an equal-opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

Applications together with an approx. 300 word essay on how your previous work experience will assist fulfilling the requirements of the above post, should be submitted to:

**Save the Children in Sri Lanka**
**Human Resources Unit**
**58A, Horton Place, Colombo 7**

**Closing Date: 02nd June 2006**

Only applicants selected for the interview will be contacted.
No telephone enquiries please

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education**, **Children Affected by Armed Conflict/ Disaster** and **Social Harmony and Peace**. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

**Protecting Rights - Promoting Responsibilities**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தை ஏற்படுத்துவதில் சர்வதேசம் தோற்றுவிட்டதா?

இலங்கையின் இனநெருக்கடியின் ஆரம்ப காலகட்டங்களில் சர்வதேசத்தின் அவதானத்தை பெறுவதற்காக இரு தரப்புமே மிகவும் முயற்சி செய்திருந்தன. குறிப்பாக அரசபடைகளின் வன்முறைகளால் மிகவும் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகம் சர்வதேசத்தின் ஆதரவை பெரிதும் வேண்டியிருந்தது. அதற்காக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் பிரசன்னமானது ஆரம்ப காலகட்டங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சார்பானதாக உணரப்பட்ட போதும் இந்திராகாந்தி, எம். ஜி. ஆர். ஆகிய தலைவர்களின் மரணத்தின் பின்னர் நிலமைகள் தமிழருக்கு பாதிப்பானவையாக மாறின. இந்திய படையால் வடகிழக்கு தமிழர்கள் கொல்லப்பட்டனர். போராளிகள் வேட்டையாடப்பட்டனர்.

இந்த பின்புலத்தில் சர்வதேசம் அல்லது வேறு நாடுகள் தொடர்பில் வடகிழக்கு தமிழர்கள் சிறிது அச்சம் கொண்டாலும் பின்னர் அந்த அச்சம் மெல்ல விலகி அரச அடக்கு முறைக்கு எதிராக சர்வதேசம் தலையிட வேண்டும் என செயற்பட்டனர்.

விசேடமாக நோர்வே தலைமையில் அனுசரணைப்பணி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் என்றும், ஏனைய வகைகளிலும் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள், மறைமுகமாக இந்தியா என பல நாடுகள் இப்போது இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் தலையீடு செய்கின்றன.

எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச தலையீடு கிடைத்துள்ளது. ஆனால், அடைந்தது என்ன? சமாதானம் ஏற்பட்டுள்ளதா? தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைத்தனவா? மக்களுக்கு நிம்மதியான வாழ்வு கிடைத்ததா? இவை எதுவும் இல்லை. தினம் தினம் மக்கள் கொல்லப்படுவதாக செய்திகள் வெளியாகின்றன. கைதுகள், சித்திரவதைகள் தொடர்கின்றன. மக்கள் யுத்த பீதியில் உறைந்துள்ளனர்.

இது தவிர போர் நிறுத்த உடன்படிக்கைக்கு பின்னரே பல நாடுகள் புலிகளை தடை செய்துள்ளன. இன்று அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் என பல நாடுகள் புலிகளை தடை செய்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்ய உள்ளது.

- என். ஜீவேந்திரன்

எனவே, சர்வதேச தலையீடு என்பது சமாதானத்தை ஏற்படுத்துவதில் வெற்றி பெறவில்லை மாறாக, நிலமையை மேலும் மோசமாக்கியுள்ளது என்றே பொதுமக்கள் கருதுகின்றனர். குறிப்பாக தற்போதைய வன்செயல்களை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க இந்த சர்வதேச செல்வாக்கு உதவி செய்யவில்லை என்பது ஒருபுறமிருக்க ஜெனீவா பேச்சுக்களின் பின்பு குட்டி யுத்தம் ஒன்று நடைபெறுகின்ற அளவுக்கு நிலமை மேலும் மோசமாகியுள்ளது. இதனை சர்வதேசத்தின் தோல்வி என ஒத்துக்கொள்ளலாமா? இல்லையா? என்பதை உங்கள் தீர்மானத்திற்கே விட்டுவிடுகிறேன்.

## கருத்தாடல் களம்

### யாழ் மாணவர்களின் கல்வியை சீர்குலைக்க வேண்டாம்!

சர்வதேச தமிழ் மாணவர் பேரவையை காட்டுமிராண்டித்தனமாக தாக்கி, அங்கிருந்த கணனிகள், தளபாடங்கள் என்பவற்றை அடித்து நொருக்கிவிட்டு படையினர் எதையும் செய்யாதது போல் நடிக்கின்றார்கள். அத்தோடு சர்வதேச தமிழ் மாணவர்களுடைய அமைப்பு மற்றும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகம் ஆகியன தீயிட்டமை என்பன சர்வதேச சமூகம் அவதானிக்க வேண்டிய விடயங்களாகும்.

மேலும் 1982ம் ஆண்டு யாழ்பொது நூலகம் படையினரால் எரிக்கப்பட்டு தமிழ் மாணவர் சமூகத்தின் கல்வியை பாழாக்கியமை சர்வதேச மக்களின் உள்ளத்தில் பதிந்த பதிவுகள் ஆகும். எவ்வளவுதான் கல்விச்செயற்பாடுகளை தடுத்தாலும் தமிழ் மாணவர்கள் ஒரு போதும் துவண்டு விடமாட்டார்கள் என்பதற்கு மாணவர்களின் பெறுபேறுகள் சாட்சிகளாகின்றன. தயவுசெய்து தமிழ் மாணவர்களின் கல்வியை சீர்குலைக்க வேண்டாம்.

துசாந்தன், மஜா, யோகன், பிரபு, அஜித், கோபு, விபுலன், அபிலன் ஸ்ரீகணேசன்
வடமராட்சி

### சிறாரின் உரிமை பேசும் அமைப்புகள் எங்கே?

இன்று எமது நாட்டில் மனிதப் படுகொலைகள் மலிந்து விட்டன. சூடான், ருவாண்டா போன்று நாடுகளில் பாரியளவிலான மனித படுகொலைகள் இடம்பெற்றன என்று படித்ததுண்டு. ஆனால் அது இன்று இலங்கையில் இடம்பெறும் போதுதான் அதன் தாக்கத்தை உணர்கிறேன். ஏன் படுகொலை? நான்கு மாதக்குழந்தை என்னதான் செய்தது? நான்கு வயது குழந்தைக்கு என்னதான் தெரியும்? அதற்கு உலகத்தில் வாழ உரிமையில்லையா? இதுவா மனித உரிமை?

மனித உரிமை பேசும் அமைப்புகளே, நாடுகளே கேளுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு இந்த கதி ஏற்பட்டால் வாய் திறக்கமாட்டீர்களா? இங்கு சிறுபான்மை இனமாக பிறந்த சிறார்கள் கொல்லப்படும் கொடூரத்தை உங்களால் உணர முடியவில்லையா, அல்லது உணர்வு தான் கெட்டுவிட்டதா? பதில் கூறுங்கள் ஐயா. சிறார்கள் உரிமை பற்றி பேசும் ஓர் அமைப்பு இலங்கையில் இருப்பதாக கேள்விப்பட்டேன். அது எங்கே வதியாக கண்ணை மூடிக் கொண்டார்களா?

கதறும் இதயம்
அபிராமி
முல்லை.

### அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

**உறுப்புரை – 27**

1. சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையிற் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும் அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.


## வாசகர் கவனத்திற்கு

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.
விழிப்பின் பதிவுகள் இதற்கு உங்கள் அபிப்பிராயங்களையும் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

முகவரி:
விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டி.பி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி:– villippu@yatv.net


## உறங்கும் நகரம்

சுருங்கிவிட்ட
சுறுசுறுப்பான உலகில்
அடங்கி விட்டது
எனது நகரம்
உறங்கும் நகரமாய்

வெட்டுவதற்கு
வெட்டிகளும்
இறக்குமதியான
பிரதேச நகரொன்று
நிகழ்தகவுக் கொலைகளும்
நிகழலாம் என்பதால்
பகலிலேயே
தூங்கிக் கொண்டிருக்கிறது
எனது நகரம்

என் இதய நரம்புகள்
அறுபட்டுக்கிடக்கின்றன
நண்பர்கள் சந்திப்பு
நிறுத்தப்பட்டுள்ளது.

உத்தியோகப் பற்றற்ற
ஊரடங்கு
பகல் பன்னிரண்டுக்கு
முன்னதாக
முழுநடவடிக்கைகளையும்
முடக்கிவிட - எனது நகரம்
உறங்கும் நகரமாய்

வெடிக்கலாம் என்பதால்
எங்கும் நம்பி
காட்டமுடியவில்லை
தலை

சந்திரனுக்கு மனிதன்
சென்றுவந்த உலகில் - நாங்கள்
சந்திக்குப் போவது கூட
சவக்காலைக்கு சமமாய் ஆனது
சுற்றிவரத் தெருக்களில்
நீண்டிருக்கும் துப்பாக்கிகளால்
எங்கள் நகரம்
சுற்று மதில்களுக்குள்
தூங்கும் நகரமாய்

பட்டாம் பூச்சியை
போத்தலுக்குள் அடைத்தது போல..
என் முற்றத்துக் காற்றும்
அடைபட்டுக் கிடக்கிறது

உறங்கும் நகரில்
என் எண்ணச் சிறகுகள்
நம்பிக்கை இழையில்
விழிப்பாய்
அசைந்தே செல்கிறது.

எஸ். ஆர் : தனபாலசிங்கம்
மேலல்வை

# தலவாக்கலை நீர்த்தேக்கத் திட்டம்

## பின்னணியும் எதிர்ப்பியக்கமும் மலையகத்தலைமைகளும்

- மோகன்ராஜ்

(கடந்தவார தொடர்ச்சி)

உண்மையில் மலையக தமிழர் இத்திட்டத்தால் நேரடியாக பாதிக்கப்படவில்லை. ஏனெனில், அத்திட்டம் சிங்கள கிராமங்களிற்கு மத்தியிலே தான் அமைக்கப்பட்டது. ஆனால், அதன் பாதிப்பு செயற்கையான முறையில் மலையக தமிழர் மீது காமினி திசாநாயக்கவால் திணிக்கப்பட்டது. எவ்வாறெனில் அத்திட்டம் அண்டியிருந்த புசல்லாவை கம்பளை பகுதியில் பெருந்தோட்ட காணிகள் சுவீகரிக்கப்பட்டு அத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியினரான சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆறுமுகத்திடம் அபகரித்து அப்புகாமிக்கு வழங்கும் இந்த சமூக அநீதியை எதிர்த்து சில தொழிற்சங்கங்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு கூட சிங்கள நீதிபதிகளால் நிராகரிக்கப்பட்டது.

இதிலே வேடிக்கையான விடயம் என்னவென்றால் காலஞ்சென்ற தொண்டமானுக்கு சொந்தமான தேயிலைத்தோட்டம் வெவண்டன் இங்கிருந்து கூப்பிடு தொலைவில்தான் அமைந்துள்ளது. அவரது மாபெரும் தொழிற்சங்க பலத்தையோ, தான் வகித்த அமைச்சர் பதவியைக்கொண்டே அவ்வநீதியை தடுத்த நிறுத்த அவர் முயலவில்லை. அவர் மௌனமாக ஜே. ஆர் அரசிற்கு தனது விசுவாச ஒத்துழைப்பை வழங்கி கொண்டிருந்தார்.

விக்டோரியா திட்டம், கொத்மலை திட்டம் ஆகிய இரு திட்டங்களின் மூலம் இரு தமிழ் குவியமைப்புப்பகுதிகளில் தனது குடியேற்றத் தாக்குதலை வெற்றிகரமாக நிறைவேற்றிய பின்னர் காமினி திஸாநாயக்க மலையகத் தமிழர் மிக செறிவாக வாழும் மையப்பிரதேசத்தில் தனது இறுதித்தாக்குதலை தொடர முஸ்தீபு அமைத்தார். தலவாக்கலை நீர்த்தேக்க திட்டத்தை அமைத்து தமிழ் மக்களின் இனச்செறிவை இல்லாமல் செய்வதே அதுவாகும். ஆனால் அது அத்தனை சுலபமான காரியமாக இருக்கவில்லை. அவர் பல்வேறு சவால்களை எதிர்நோக்க நேர்ந்தது.

முதலாவதாக அத்திட்டத்தை தலவாக்கலையில் அமைக்காமல் அதற்கப்பால் சில மைல்கள் தள்ளி வட்டகொடை பகுதியில் அமைக்குமாறு சுற்றாடல் நேயஅமைப்புகளும் புவியியலாளர்களும் பலமாக குரல் எழுப்பத்தொடங்கினர். அதற்கு காரணம் உலகின் மிக அழகான 25 நீர்வீழ்ச்சிகளில் ஒன்று எனக்கருதப்படும் சென்கிளயார் நீர்வீழ்ச்சி, இலங்கையின் இரண்டாவது உயரங்கூடிய டெவன் நீர்வீழ்ச்சி உட்பட இப்பகுதியில் உள்ள ஏழு பிரதானமான நீர்வீழ்ச்சிகள் முற்றாகவோ பகுதியாகவோ இத்திட்டத்தால் மூழ்கடிக்கப்பட்டால் அதை சுற்றிவர உள்ள பகுதிகளில் மண்சரிவு அபாயம் அதிகரிக்கும் என்ற நிலமையும் இருந்தது.

இரண்டாவதாக சிங்கள குடியேற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் தலைமை பாத்திரம் வகித்த வரலாறு ஒன்று தலவாக்கலை பிரதேசத்திற்கு உண்டு. இவ் உத்தேச தலவாக்கலை நீர்த்தேக்கத் திட்டம் அமையப்போகும் இடத்தில் தான் தியாகி சிவனுலட்சுமணனின் கல்லறையும் இருக்கிறது. டேவன் தோட்டக் காணியை சுவீகரித்து சிங்களவருக்கு பகிர்ந்தளிக்க அநுரா பண்டாரநாயக்கவும் ஹெக்டர் கொப்பேகடுவையும் மேற்கொண்ட பகீரத பிரயத்தனத்தை தடுத்து நிறுத்துவதற்காக நடத்தப்பட்ட வீரப்போராட்டத்தில் 1977 மே மாதம் 11ம் திகதி பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியாகி இவ்வீர இளைஞன் அமரத்தும் அடைந்தான். அவ்வீரப் போராட்டத்தின் காரணமாக அப்பகுதியில் சிங்கள குடியேற்றத்தை நிறுவ முடியாமல் போனது. அவன் அன்று சிந்திய இரத்தம் இன்றும் மண்சார்ந்த மலையக தேசியவாதத்திற்கு ஈரம் பாய்ச்சிக் கொண்டிருக்கின்றது.

(மிகுதி அடுத்த வாரம்)

நன்றி - தேனீ இணையத்தளம்

## கண்டது.. கேட்டது.. படித்தது..

# நாளை எங்கு?

சிறிது சிறிதாக வடகிழக்கின் இனப்பிரச்சினை எமது வாழ்வில் நாளாந்தம் பேசப்படுகின்ற விடயமாக மாறிவருகிறது. நாளாந்த செய்திகளின் பட்டிமன்றங்களாக நாட்டின் வீடுகள், கடைத்தெருக்கள், காரியாலயங்கள் மாறியிருக்கின்றது. கடத்தல், பயமுறுத்துதல், கொள்ளையடித்தல், கொலை போன்றவற்றின் எண்ணிக்கைகள் மனித நேயம் புதைக்கப்பட்டு நாடு ஒரு கொ?ரமான நிலையை நோக்கி தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் யுத்தத்தை ஆதரிக்கின்றவர்கள் என்ன சொல்கிறார்கள்?

பயங்கரவாதத்தை தோல்வியுறச்செய்து யுத்தத்திற்கான தீர்வை காண்பதற்கு கொழும்பிலிருந்து சிந்திக்கின்ற அவர்கள் தேசிய திட்டமிடல்கள் மற்றும் செயற்பாடுகளை கொழும்பில் ஆரம்பித்திருக்கிறார்கள். அதேநேரம் பல்வேறு தரப்பினருக்கும் இடம்பெற்ற அநீதிகள் பற்றி பேசுவதோடு அந்தந்த தரப்பினர் தமக்கே உரிய தேசிய வேலைத்திட்டங்களை வகுத்துக் கொண்டு அவற்றுக்கு சார்பான ஊடக அறிக்கையினை வெளியிட்டு வருகின்ற நேரம் வடக்கின் வன்முறைகள் யுத்தத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இவ்வாறான பின்னணியுடன் ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்ற நிலைப்பாட்டில் காணப்படுகின்றவர்களின் நிலைப்பாடு என்ன?

இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரத்தை பகிர்வது ஒற்றையாட்சிக்குள்தான் இடம்பெற வேண்டும் என்று கூறி பிரச்சினையை மேலும் வளர்த்து கொண்டு இருப்பதன் பிரதிபலன்கள் என்னவாக இருக்கும்?

சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும், இனங்களுக்கு இடையிலான பலமான கட்டமைப்பு இல்லாத நிலையில் எழுந்த பிரச்சினைகள் நீண்டு சென்று எதிர்கால சந்ததியினருக்கும் யுத்தத்தினை பரிசாக வழங்கியுள்ளது.

கரப்பான்பூச்சிக்கு சிவனொளிபாதமலைக்கு போக முடியாது. வண்ணாத்திப்பூச்சிகளுக்கு மாத்திரமே செல்ல முடியும். ஒற்றையாட்சிக்குள்தான் அதிகாரத்தை பகிரவேண்டும் என்று கூறுகின்ற இக்கரப்பான் பூச்சிகளால் இனப்பிரச்சனைக்கான தீர்வினை பெற முடியாது என்பது நிதர்சனமாகும். அதிகார பகிர்வின் முக்கியத்துவத்தினை புரிந்து கொள்வதற்கு விட்டுக்கொடுப்புக்கள், இசைந்து செல்லும் மனப்பான்மை, பிரிவினையை தாங்கும் திறந்த மனநிலமை என்பன இல்லாமல் எடுக்கும் முடிவுகளினால் இந்த நாடு இன்னும் அழிவடைவதை தடுக்க முடியாது.

செய்ய வேண்டியது என்ன?

- சஞ்ஜீவ நிரோசன் ஏக்கநாயக்க

அதிகாரத்தினையும், பொருளீட்டலையும் சுற்றி காணப்படுகின்ற உலகின் சமூக, பொருளாதார, அரசியல் கூறுகளை கருத்திற்கொண்டு நாங்கள் பயணிக்கும் பாதையை முறையான விதத்தில் வகுத்துக்கொள்ள வேண்டும். சுயாட்சி என்பது இலங்கையில் முன்னர் இருந்தே நிலவிய ஒரு நடை முறையாகும். தம்மை தாமே நிர்வகிக்கும் கொள்கையானது இதனோடு பொருந்துகிறது. முன்னர் பண்டுகாபய அரசரின் காலத்தில் நடை முறையில் இருந்த கிராம அதிகார அலகானது நாங்கள் சமஷ்டி முறையை விளங்கிக்கொள்ள போதுமானதாகும்.

தெளிவற்றதும் பல தலைமைத்துவங்களையும் கொண்ட இன்றைய சூழலில் நாட்டின் சமூக பொருளாதார அரசியல் கூறுகள் வீழ்ச்சியடைவது நாங்கள் மேலும் மேலும் இருளை நோக்கி செல்வதையே குறிக்கிறது. இவ்வாறான நிலையில் ஒற்றையாட்சிக்குள்தான் அதிகாரத்தை பகிரும் நிலைப்பாட்டினால் இன்னும் பிரச்சினைகளை வளர்வதை தடுக்க முடியாது.





விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இலக்கம் 0112787041-9 தொலைநகல் இலக்கம் 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net


பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லைசின் அடங்கிய எப்பட்டன்
உடன்
## உணவருந்தும் நேரம் மகிழ்ச்சியான நேரம்

சிறு பிள்ளைகளின் முறையாக உணவு உண்ணும் பழக்கம் எல்லாத் தாய்மார்களுக்கும் பெரும் வேதனையாகும். இதனை லைசின் அடங்கிய எப்பட்டனின் உதவியால் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

பாணியாகவும், சாப்பிடக்கூடிய வில்லைகளாகவும் கிடைக்கும் லைசின் அடங்கிய எப்பட்டன் உங்கள் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியாகத்து உணவு உண்ணும் தன்மையை அபிவிருத்தியடையச் செய்கிறது. நோயாகவோ அல்லது உணவுடன் கலந்தோ சீராக செய்யப்பட்டுள்ள அனைத்து ... கவும். உங்கள் பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான உயிர்ச்சத்துக்களை அது தருகின்றது.

ஆகவே, லைசின் அடங்கிய எப்பட்டனுடன்




ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.


## 11ஆம் ஆண்டு மணிவதனன் ஞாபகார்த்த வெற்றிக் கேடய இறுதிப்போட்டிகள்

இன்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பம். 12 ஒவர், 7 பேர் பங்குபற்றும் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் அரையிறுதியாட்டம் காலை 9மணிக்கு சென்றலைற்ஸ் சொக்ஸ் அணியும் பற்றீசியன் A அணியும் மோதும். அதனைத் தொடர்ந்து இப்போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்ற சென்றலைற்ஸ் புளூஸ் அணி இறுதியாட்டத்தில் மோதும். வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

கிரிக்கெட் ரசிகர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(50326)(32-33-15-45) சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஊரின் முன்னேற்றத்திற்கு
உறுதுணை புரிந்தவரும் ஒப்பற்ற
சமூக சேவையாளருமான
**கந்தையா இராமநாதன்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மசாந்திக்கும்
பிரார்த்திக்கிறோம்.

(50449)(32-15-45) கோண்டாவில் மக்கள்.

## எட்டாம் ஆண்டின் விழிம்பில்

பிறப்பெடுத்து 17 - 05 - 1931



பிறப்பறுத்து 27 - 05 - 1998

**அமரர் வைத்திலிங்கம் கனகரெட்ணம்**
(முன்னாள் சாரதி, யாழ்.மாநகர சபை)

அப்பா! நாங்கள் இரவு வரும் வரை காத்திருப்போம்
ஏன் எனில் கட்டாயம் கனவில் நீங்கள் வருவீர்களே
அண்ணாவிடமும் சென்று எம்மிடமும் வர இருவழிப்
பயணச் சீட்டா வாங்கிச் சென்றீர்கள்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புகையிரத வீதி,
புங்கன் குளம்,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் தினமும் வாடும்:
மனைவி- க.மோட்சலெட்சுமி
மகன்- க.ரதீஸ்-Finland
மகள்- க.கமலினி - (யாழ்.பல்கலைக்கழகம், இராமநாதன் நுண்கலைத்துறை மாணவி).

(50472)(26-32-15-45)

# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் - நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
பரிபாலன சபைத் தலைவர்

## கந்தையா இராமநாதன்

அவர்களின் மறைவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு
எமது சபை ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மா
அம்பாளின் திருப்பாதங்களில்
சாந்தியடைய அம்பாளைப்
பிரார்த்திக்கின்றோம்.

(50548) (24-32-15-45)

ஆலய பரிபாலன சபையினர்,
கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் மீதும் சில தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும்!

## குண்டைத் தூக்கிப் போடுகிறார் ஐ.தே.கவின் கிரியெல்ல

கொழும்பு, மே 28

"ஐரோப்பிய ஒன்றியம், தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும்போது அரசின் மீதும் சில தடைகளை விதிக்கும் . அதற்கான ஏற்பாடுகளை ஐரோப்பிய ஒன்றியம் செய்துவருகின்றது."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன்கிரியெல்ல நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார். நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:-

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதன் பின்பு நிலையான சமாதானம் ஒன்று வருவதற்கான வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. தினமும் அப்பாவிப் பொதுமக்களும் அரச படையினரும் கொல்லப்படுகின்றனர். சமாதானத்தை நிலைநாட்ட சரியானதொரு திட்டம் ஜனாதிபதியிடம் இல்லாமையே இதற்குக் காரணம்.

இந்த நாட்டை யுத்தத்திற்கு அழைத்துச் செல்லவும், அப்பாவி மக்களைக் கொல்லவும் அரசிற்கு உரிமை கிடையாது. நீங்கள் வடக்கு - கிழக்கில் அப்பாவித் தமிழர்களைக் கொன்றால் அதன் எதிர்விளைவு கொழும்பில் ஏற்படும்.

இந்த நாட்டிற்குக் கிடைத்திருக்கும் ஜனாதிபதி சமாதானத்தை உருவாக்கும் ஒருவர் அல்லர். அப்பாவி மக்களை அச்சுறுத்தும் - படுகொலைசெய்யும் - ஒருவரே ஜனாதிபதியாகக் கிடைத்திருக்கின்றார்.

பௌத்த கௌரவத்தைப் பாதுகாக்கின்ற அதேசமயம் சிறுபான்மை மக்களின் கௌரவமும் பாதுகாக்கப்படவேண்டும். அவர்களும் இந்த நாட்டுமக்கள். அவர்களை நாம் தவிர்க்கமுடியாது.

இலங்கை அரசு நடத்திவரும் மனித உரிமைமீறல் நடவடிக்கையை சர்வதேச நாடுகள் நன்கு உணர்ந்துவைத்துள்ளன.

இந்த அரசு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றதாகவும், சிவில் சமூகத்தைப் பாதுகாக்கத் தவறிவிட்டதாகவும் சுனாமி நன்கொடைப் பணத்தைச் சரியாகப் பகிர்ந்தளிக்கவில்லையெனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. அதுபற்றி இலங்கை அரசுக்கு எச்சரிக்கையும் செய்துள்ளது.

இதன்காரணமாக அரசுமீது சில தடைகளை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராகின்றது.

புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்யும் அதேவேளை அரசின்மீதும் சில தடைகளை விதிக்கும் என்பதில் சந்தேகமில்லை - என்றார். (க)

# கையெழுத்து வேட்டை திருமலையில் ஆரம்பம்

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கக்கூடாது என்பதை வலியுறுத்தி திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களிடம் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

இந்தக் கையெழுத்து வேட்டையின் ஆரம்ப நிகழ்வு திருகோணமலையிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையகத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர்.

ஐரோப்பிய ஒன்றியம் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுத்திருக்கின்ற நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று கோரி முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கையில் திருமலை மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் கையெழுத்துகளைத் திரட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. (த)

# பரஸ்பரம் நடந்த கொலைகளை மறந்து பேச்சுக்கு அரசு தயார்; புலிகள் தயாரா?

## இப்படிக் கேட்கிறார் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா

கொழும்பு,மே 28

அரசு செய்த கொலைகளைப் புலிகளும், புலிகள் செய்த கொலைகளை அரசும் சுட்டிக்காட்டி ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டிருந்தால் எப்படி அமைதிப் பேச்சை நடத்துவது - சமாதானத்தை எப்படி உருவாக்குவது?

இவையெல்லாம் இனிமேலும் நடக்காதிருக்க - பழையவற்றை மறந்து - புலிகள் பேச்சுக்கு வரவேண்டும். அரசு ஏற்கனவே பேச்சுக்குத் தயாராகிவிட்டது.

- இவ்வாறு பிரதி அமைச்சர் டிலான் பெரேரா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

யாழ். வெற்றிலைக்கேணியில் கடற்படையினரின் டோராப் படகுகள் தாக்கப்பட்டமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அரசுடன் பேச்சை நடத்தப் புலிகளுக்கு நம்பிக்கையில்லை எனவும் - நம்பிக்கையைக் கட்டியெழுப்பினால்தான் பேச்சுக்கு வருவோம் எனவும் - கூறிக்கொண்டு கொலைப் பட்டியலை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருந்தால் நிலைமை சரிவருமா?

நம்பிக்கையைக் கட்டியெழுப்பவேண்டும் என்றால் நாம் முதலில் பேசவேண்டும்; எமக்குள் உறவை வளர்க்கவேண்டும். விட்ட பிழைகள் என்னவென்று பேச்சின்போது சுட்டிக்காட்டப்படவேண்டும். அதைவிட்டு விட்டு பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

அரசும் - புலிகளும் இவ்வாறு குற்றஞ்சாட்டிக்கொண்டு மோதிக்கொண்டிருந்தால் நாட்டில் நல்லதொரு நிலைமை ஏற்படாது. இரு தரப்பினருக்குமிடையில் நம்பிக்கை வளராது. நாம் இப்படிச் செயற்பட்டால் யுத்த விரும்பிகளுக்கே இது இலாபமாக அமையும். அரசுக்கும், புலிகளுக்குமிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவே நோர்வே செயற்படுகின்றது. அவர்களின் உதவியுடன் நாம் பேச்சில் கலந்து சமாதானத்தை வரவழைக்க முயலவேண்டும் - என்றார். (த-07)

# கிராம சேவையாளர் சேர்க்க நடவடிக்கை

கொழும்பு,மே28

கிராம அலுவலர் பதவிக்கான வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளதாகவும் போட்டிப் பரீட்சை அடிப்படையிலும் நேர்முகப் பரீட்சை மூலமாகவும் குறிப்பிட்ட தெரிவுகள் இடம்பெறவுள்ளன. நாடு முழுவதும் தற்சமயம் சுமார் 2 ஆயிரம் வரையிலான கிராம அலுவலர் பதவிக்கான வெற்றிடங்கள் உள்ளதாகத் தெரிவிக்கின்றது. (111)

## அமைச்சர் மங்கள இப்படி வியாக்கியானம்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை ஏற்பாடு புலிகளை முடக்குவதற்கான முயற்சியல்ல

## அந்தத் தடை சமாதானப் பேச்சுக்கு அத்தியாவசியம்; அவ்வளவுதான்!

கொழும்பு,மே28

ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யவிருப்பது அவர்களைப் பேச்சுமேசைக்கு அழைப்பதற்காகவே அன்றி அவர்களை முடக்குவதற்கான முயற்சி அல்ல. பேச்சு நடைபெறவேண்டும் என்றால் இந்தத் தடை அத்தியாவசியம்; அவ்வளவுதான்.'

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பான விவாதத்தின்போது அவர் கூறியதாவது:-

அரசு எந்தவொரு நிலையிலும் யுத்தத்திற்குச் செல்லாது. பேச்சு மூலமே பிரச்சினைகளைத் தீர்க்கத் திட்டமிட்டுள்ளது. யுத்தம் நிச்சயம் ஏற்படாது.

புலிகளைப் பேச்சுமேசைக்கு அழைக்க நாம் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொள்கின்றோம். ஆனால், புலிகளோ யுத்தத்தை நோக்கியே செல்கின்றனர். அதைச் சர்வதேச சமூகம் நன்றாக விளங்கி வைத்துள்ளது.

பேச்சை நடத்துவதற்கான அத்தனை முயற்சிகளையும் நாம் செய்து முடித்துவிட்டோம். புலிகள் வருவதுமட்டும்தான் மீதமாகவுள்ளது.

இந்த நிலைமையை விளங்கிக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை பேச்சுக்கு வருமாறு அழைப்புவிடுத்து வருகிறது. அந்த அழைப்பையும் புலிகள் நிராகரித்துவிட்டனர்.

ஐரோப்பிய ஒன்றியம் இப்போது புலிகளைத் தடைசெய்ய முடிவுசெய்துள்ளது. இதன்மூலம் சர்வதேச நாடுகளில் புலிகள் மேற்கொள்ளும் நிதித்திட்டத்தைத் தடுக்க முடியும்.

இந்த நடவடிக்கை மூலம்தான் புலிகளை பேச்சு மேசைக்கு இழுக்கமுடியும். ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த யோசனையை நாம் வரவேற்கின்றோம்.

ஜெனிவாப் பேச்சில் எட்டப்பட்ட அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரச படையினர் மற்றும் பொலீஸாரைத் தவிர வேறு எவரையும் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிப்பதில்லை என்ற தீர்மானம் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணமே உள்ளது.

பொலீஸார் மற்றும் படையினருக்கு இது தொடர்பாக அறிவித்து அவர்கள் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆயுததாரிகள் நடமாடாத வண்ணம் படையினர் ரோந்து நடவடிக்கைகளிலும், தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்த கருணா குழுவுக்கும் அரசுக்கும் எந்தத் தொடர்புமில்லை. கருணா குழுவினரின் ஆயுதங்களைக் களையுங்கள் என்று எம்மிடம் புலிகள் கேட்கமுடியாது.

கருணா பிரிந்த விவகாரமானது புலிகளின் உள்வீட்டு விவகாரம் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். கருணா பிரிந்ததுபோல், நாளை தமிழ்ச்செல்வனோ அல்லது சூசையோ பிரியமுடியும். அவர்கள் அவ்வாறு பிரிந்தால் அவர்களின் ஆயுதங்களையும் களையுங்கள் என்று புலிகள் அரசிடம் கேட்கமுடியாது.

புலிகளின் உள்வீட்டு விவகாரத்தில் நாம் ஒருபோதும் தலையிடமாட்டோம். அப்படித்தான் நாம் கருணா குழு விடயத்திலும் செயற்பட்டுவருகின்றோம்.

கருணா குழுவின் ஆயுதங்களை அரசு களையவில்லை என்று கூறி பேச்சுக்கு வராமல் இருப்பதில் நியாயமில்லை - என்றார் அமைச்சர். (த - 07)

# இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் விவரத்தை வெளியிடுக!

## சபையில் மகேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் படையினரால் கைதுசெய்யப்பட்டு இராணுவத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளின் பெயர் விவரங்களை அரசு உடனடியாக வெளியிட வேண்டுமென்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.மகேஸ்வரன்.

இந்த இளைஞர், யுவதிகளைப் பார்வையிட அவர்களது பெற்றோர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வடக்கு - கிழக்கின் வன்முறை நிலைமை குறித்து நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் ஊரெழு முகாமும், வவுனியாவில் ரம்மியா ஹவுஸ் முகாமும் இராணுவத்தினரின் தடுப்பு முகாம்களாகச் செயற்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுகின்றனர்; பலர் கடத்தப்படுகின்றனர். வவுனியாவில் கடத்தப்படும் வர்த்தகர்களிடமிருந்து கப்பம் கோரப்படுகிறது.

இன்று உலக நாடுகள் புலிகளைத் தடைசெய்யவேண்டுமென கோரிவருகிறது இலங்கை அரசு. ஆனால், மனித உரிமைகளை மீறிய நாடுகளில் முதலிடமும் இலங்கைக்கு வெகுவிரைவில் கிடைக்கப் போகிறது.

அல்லைப்பிட்டியில் அப்பாவி மக்களைக் கொன்றுகுவித்தமைக்கான தண்டனையை அரசு விரைவில் அனுபவிக்கத்தான் போகிறது. அச்சம் காரணமாக அகதிகளாகச் செல்வோர் கூட கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுகின்றனர். இது கவலைக்குரியது - என்றார் மகேஸ்வரன் எம்.பி. (த - 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கைதடி நாவற்குளி தெற்கில் நெற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 021 - 2223555. (50506)

கொலம்பியா எஞ்சின் 18 HP Starter Switch, motar Starter Indian main Switch, Delta motor starter மற்றும் எலக்ரிக்கல் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.சிதம்பரப் பிள்ளை, சங்கத்தானை, சாவகச்சேரி.(50600)

பேலியகொடை பொலீஸ் நிலையத்துக்கு எதிரில் கண்டி, பிரதான வீதியிலிருந்து நடை தூரத்தில் நவலோக வீடமைப்புத் திட்டத்தில் 06 பேர்ச் காணியில் 04 படுக்கையறைகள் தண்ணீர், மின்சாரம், தொலைபேசி, குளிரூட்டி வசதிகளுடன் கூடிய இரண்டு மாடிகள் கொண்ட வீடொன்று மிகவும் பாதுகாப்பான அமைதியான சூழலில் உடனடியாக விற்பனைக்கு உள்ளது. நீர்கொழும்பு பிரதான பாதைக்கும் அருகில். தொடர்புகளுக்கு: 0112908457. (சி-49439)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய டோமன் பிஞ்சஸ் (Doman Pinchas) பூச்சி நீக்கப்பட்டது. நல்ல இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 101, கச்சேரி நல்லூர் வீதி, (மூத்த விநாயகர் கோயில் முன்பாக) T.P.: 2227022 (50571)

காவலுக்குரிய டோபர்மன் பின்ச்சர் x டேன் நாய்க்குட்டிகள் மிக மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவராஜா அவென்யூ, தபாற்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. 0777491062. (50580)

## காணவில்லை

பால்தரும் பிறவுண்நிற பசுமாட்டை 22-05-2006 முதல் காணவில்லை. மூக்கில் கயிறு போடப்பட்டது. இதனைக் கண்டவர்கள் அ.இராசலிங்கம், 34/13, இராமநாதன் வீதி, கலட்டி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 0776158078 (50598)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், 05.06.06 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, உடுவில் பாம் - ஆலடி உடுவில் , நல்லூர்பாம் சென்ரர் இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-48443)

## தவறிவிட்டது

கடந்த 18.05.2006 அன்று நல்லூர் இளங் கலைஞர் மன்றத்திலிருந்து முத்திரைச்சந்தி, கச்சேரி வீதியூடாக சுண்டுக்குளி சென்று அங்கிருந்து ஏ-9 வீதியூடாக கைதடிச் சந்திக்கு வரும் வழியில் தங்க அட்டியல் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதி முத்துமாரி அம்பாள் ரேடேஸில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 0779775839 (சி-49433)

ஜெகனேஸ்வரன் சிவநேசம் என்பவரது தே.அ.அ. சுன்னாகத்திற்கும் மருதனார் மடத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் றேடியோஸ்பதி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (50601)

## வீடு வாடகைக்கு

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:T.P.: 021 - 222 8179 (50605)

## குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
பிரபல்யமான ஹோட்டல் ஒன்று
குத்தகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0777178493
(சி-49436) (21.14.17)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், மணமகன் 37 வயது, இங்கிலாந்து ஆங்கிலேய நிறுவனத்தில் தகுந்த கல்வியுடன் உதவி முகாமையாளர். சகோதரி 40 வயது, அழகானவர் இளமைத் தோற்றம், மிகச் சிறந்த சீதனமுடையவர், இவர்களுக்கு மணமக்கள் தேவை. மாற்றுச் சம்பந்தத்திற்கும் விருப்பமுண்டு. தொடர்பு: விளம்பர இல. 2870, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (50332)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் நிரந்தர குடியுரிமை பெற்ற சுயதொழில் புரியும் 1975ஆம் ஆண்டு பிறந்த மூலம் 2ஆம் பாதம் 8இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு படித்த அழகான பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம், சுயவிவரம், புகைப்படம் என்பவற்றைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். A.சுப்பிரமணியம் 177, Old moor street Colombo 12. T.P 0714353000. (50493)

இந்து கௌரவ குடும்பம், 1967, செவ்வாய்குற்றமற்ற, மிருகசீரிடம் 2ஆம் பாதம், கிரகபாவம் 5 விவாகரத்துப் பெற்ற அரச உத்தியோக மணமகனுக்கு, அரச உத்தியோக மணமகள் விரும்பத்தக்கது. உயரம் 5'10'' தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர், யாழ்.வீதி, சுதுமலை சந்தி, மானிப்பாய். T.P.: 021 - 4591068 (50545)

இந்து கௌரவ குடும்பம், 1975 பூரம், செவ்வாய் 2இல் கிரகபாவம் 41½ உயரம் 5'10'' மணமகனுக்கு B.Com பட்டதாரி ஆசிரியர், அரச உத்தியோக மணமகள் விரும்பத்தக்கது. தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர், யாழ்.வீதி, சுதுமலைச் சந்தி மானிப்பாய். T.P.: 021 - 4591068 (50544)

இந்து கௌரவ குடும்பம், 1973 சித்திரை முதலாம் பாதம், செவ்வாய் 7 இல் கிரக பாவம் 40¼ உயரம் 5'2'' உப தபால் அதிபர் மணமகனுக்கு படித்த மணமகள் விரும்பத்தக்கது. சீதனம் எதிர்பார்க்கப்படும். தொடர்பு: T.P 021 - 4591068. (50543)

இந்து கௌரவ குடும்பம், 1972 செவ்வாய் இல்லை கிரகபாவம் 9, சித்திரை 2ஆம் பாதம் உயரம் 5'5'' B.Sc. பட்டதாரி கம்பியூட்டர் எஞ்சினியர் மணமகனுக்கு டாக்டர் or எஞ்சினியர் மணமகள் விரும்பத்தக்கது. தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர் யாழ்.வீதி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய். T.P: 021 - 4591068 (50542)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1977 பரணி, செவ்வாய்க்குற்றமற்ற, கிரகபாவம் 29 உயரம் 5'மணமகளுக்கு டாக்டர் எஞ்சினியர் மணமகன் விரும்பத்தக்கது. அல்லது வெளிநாடு, கனடா விரும்பத்தக்கது. தொடர்பு: பரம் திருமண ஏற்பாட்டாளர், யாழ்.வீதி, சுதுமலைச் சந்தி மானிப்பாய்.T.P.: 021 4591068 (50544)

## பராமரிப்பாளர் தேவை

பெண் நோயாளியைப் பராமரிப்பதற்கு ஒரு பராமரிப்பாளர் தேவை. ஊதியமாக 3000/- வழங்கப்படும். தொடர்பு: திருமதி நா.கனகம்மா, 43/1, யமுனாவீதி, நல்லூர். (50607)

## அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன ஒன்றரை (1½) மாத அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. நேரில்வந்து பார்வையிட்டு பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி P.T. பாலன், இல.45, சிவகுருநாதன் வீதி (பிறவுண் வீதியின் உட்பக்க லேன்) யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (50557)(21.14.17)

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த 75 இல் பிறந்த ஜேர்மன் P.R. உள்ள சித்திரை 4 ஆம் பாதம், 4 இல் செவ்வாய் கிரகபாவம் 40 உள்ள மணப்பெண்ணுக்கும், 80 இல் பிறந்த பூரட்டாதி 2ஆம் பாதம் 1 இல் செவ்வாய் 93 கிரகபாவம், பிரான்ஸ் P.R. உள்ள மணப்பெண்ணுக்கும், 83 இல் பிறந்த பரணி முதலாம் பாதம் குற்றமற்ற 20 கிரகபாவம் உள்ள கனடா P.R. உள்ள மணப்பெண்ணுக்கும் மணமகன்கள் தேவை. பட்டதாரி, உள்நாட்டு, வெளிநாட்டில் உள்ள P.R. இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

K.சுந்தரர், கனகசபை வீதி, மானிப்பாய்.
0776534826.
(50581) (21.14.17)

## சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட "PEAVEY" Speaker Boxes விற்பனைக்குண்டு





தொடர்பு:-
கோபுரம் சவுண்ட்ஸ்
38, மஞ்சவனப் பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,மே.28

தென்மட்டுவில் வேரக்கேணி கந்தசாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் இரண்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் பத்தாம் திகதி முற்பகல் 11 மணிக்கு தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் 12 ஆம் திகதி மாலை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். (117)

* *

யாழ்ப்பாணம்,மே.28

இளவாலை ச்காயபுரம் புனித சதா சகாய அன்னை ஆலயத் திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மாலை ஆறு மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம் பெறும்.

2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணை ஆராதனை வழிபாடும் அதனைத் தொடர்ந்து நற்கருணைப் பவனியும் இடம் பெறும்.

3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் அதனைத் தொர்ந்து அன்னையின் ஆசீரும் இடம் பெறும். (190)

## மிதிவெடி வெடித்து ஊழியர் காயம்

யாழ்ப்பாணம்,மே.28

தவறுதலாக மிதிவெடி வெடித்ததில் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் காயமடைந்தார்.

யாழ். மாவட்டத்தில் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் பிரிட்டிஷ் நிறுவனமான ஹலோ ரட்ஸ்ட்டினது ஊழியரான செல்வராஜா கஜேந்திரன் (வயது 24) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

உரும்பிராய் பகுதியில் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.(ற-15-190)

## மலேரியா தடுப்பு நடவடிக்கை

கைதடி,மே.28

யாழ்ப்பாணம், சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையின் மலேரியா தடுப்பு இயக்கம் மலேரியா நோயை இனங்காண்பதற்கான குருதிப்பரிசோதனை நிகழ்வு ஒன்றை கடந்த திங்கட்கிழமை சாவ... மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் நடத்தியது. (75)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் ஊர்காவற்றுறை

### லொறிகள் விற்பனை

சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நல்ல நிலையில் உள்ள பின்வரும் இலக்கங்களைக் கொண்ட இரு லொறிகள் விற்பனைக்காக எம்மிடம் உள்ளன. கேள்விகோரல் கடிதமூலம் குறிப்பிட்ட லொறிகளை விற்பனை செய்ய உள்ளோம். தேவையானவர்கள் தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு லொறிகளைப் பார்வையிடலாம். கேள்வி கோரல் கடிதங்களை 03.06.2006 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, பதிவுத்தபாலிலோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். கேள்வி வைப்புத் தொகையாக ரூ.1000/-உம் செலுத்த வேண்டும். முன்னர் வைப்புத் தொகை செலுத்தியவர்கள் மீண்டும் செலுத்த வேண்டியதில்லை.

1. ஸ்சுசு லொறி இல.27/1380
2. லெய்டன் (கொமட் சுப்பர்) இல. 43/8882

**பொது முகாமையாளர்.**
தொ.இல. 021 222 6160 (சி.49411) (39.21.14.17)

Danish Demining Group

## VACANCY NOTICE

**Post Title: Drivers**

**Duties and Responsibilities:**

- Safely driving of all type of vehicles, including 4-wheel drive
- Drive for Expatriates around the country
- Able to translate in English, Tamil and Sinhalese
- Carry out small maintenance jobs.
- Perform any other duties as required.

**Requirements :**

- Minimum 3-4 years experience in driving all vehicles, including 4 wheel drive.
- Valid Driving license.
- Understand English, Tamil and Sinhalese.
- Basic Mechanical knowledge.
- Willing to work long hours.

**How to apply:**
Applications with contact telephone numbers should be sent to reach Danish Demining Group, 18/10, Wyman Road, Jaffna.

**Closing Date: Sunday, 4th June 2006.** (50608)

## Imported PIII Computer

**Complete set, Used**

**15", 17", 19" & 21" Monitors**

**மிக மிக குறைந்த விலையில்**

**UNIT**
437, K.K.S Road, Manohara Junction, Jaffna.
T.P: 021- 4590720

## மரண அறிவித்தல்

### கந்தையா இராமநாதன் (J.P)

(சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம், ஓவசியர் (PWD), தலைவர், கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கோண்டாவிலையும் 45/23A, பிறட்றிக்கா வீதி, வெள்ளவத்தையில் வசித்துவந்தவருமாகிய கந்தையா இராமநாதன் அவர்கள் 24.05.06 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- முத்தம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் செல்வராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற மயில்வாகனம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீ இராமநாதன்(U.K), நீற்ரா (U.S.A), உருத்திரா (U.S.A), நவீந்திரா (U.S.A), ரூபா (U.K), றெஜினா (U.S.A) மகிந்தன் (U.S.A), குகன் (U.S.A), அசோகன் (U.S.A) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மஞ்சுளா, அமுதசாகரன், நாகேஸ்வரி, ஜெயமலர், Dr.சிவநேசன், புவனநாயகம், குவான்டலீன், ஷீலா, Dr.சுவர்ணலதா ஆகியோரின் அன்பு மாமனும் Dr.விவேக், மீரா, மித்திரன், கீதா செந்தில்குமார், கௌசிகன் Dr.அரவிந்தன், றோகான், றேகா, முகுந்தன், துஷ்யந்தி, சிந்தியா, Dr.அஜந்தன், கிரிகரன், சோனியா, Dr.நிறோஜா, தனுஜா, ரமேஷ் ஆனந், லக்ஷன், ரதீஸ், நதியா, ஆகியோரின் பாட்டனாரும் சதீஷின் அன்புப் பூட்டனாரும் குமாரசாமி (சிங்கப்பூர்), வல்லிபுரம் (மலேசியா), சரஸ்வதி இராசையா (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அவரின் பூதவுடல் பகல் 11.30 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45/23A, பிறட்றிக்கா வீதி,
வெள்ளவத்தை.
தொ.இல.2589409 (C/49399)

தகவல்: (மனைவி)
திருமதி செல்வராணி இராமநாதன்,
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதன்ஸ் சினிமா — யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும்
கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜாக்சனின்

**கிங் - கொங் King Kong**

தங்கத் தமிழ் மொழியில்
[பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை]
காட்சி நேரம் : 10.30, 2.30

## ராஜா — யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

**பட்டியல்**

புதிய வெளியீடு
காட்சி நேரம்; 10.30, 2.30 மட்டும்


## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய கல்வி நிறுவகபட்டப்பின்கல்வி டிப்ளோமா 2006/2007 பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் யாழ். இந்துக்கல்லூரி நிலையத்தில் வார இறுதி நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி குருதேவி நித்தியானந்தன்

அவர்கள் மரணம் அடைந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவரது மறைவிற்கு ஆழ்ந்த அனுதாப அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

கணேசன் குடும்பத்தினர்,
மக்ஷல் கவுஸ் ஸ்தாபனத்தார்.

(50620)(32-14-11)

## திருமண அழைப்பு

ஓம் விராட் விஸ்வப் பிரம்ம நமஹ

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விய வருடம் வைகாசித் திங்கள் 15 ஆம் நாள் (29.05.2006) திங்கட்கிழமை முற்பகல் 11.52 தொடக்கம் 1.22 வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்



திருநிறைசெல்வன் **கேசவநாதன்** அவர்களுக்கும்

திருநிறைசெல்வி **யசோதா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மட்டுவிலில் மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. எனவே அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுகொள்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி சண்முகலிங்கம் யோகரத்தினம்
கைதடி கிழக்கு, கைதடி.

திருமதி அப்பாத்துரை நாகம்மா
பொற்கொல்லர் வீதி,
மட்டுவில் வடக்கு, மட்டுவில்.

**வரவேற்பு உபசாரம்:** கைதடியிலுள்ளமணமகன் இல்லத்தில் 30.05.2006 பி.ப2 மணிக்கு நடைபெறும்.

(50618)(23-32-14-11)

(இருவீட்டார் அழைப்பு)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தவரத்தினம் அன்னலட்சுமி *(பவளம்)*

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவரத்தினம் அன்னலட்சுமி அவர்கள் 26.05.2006 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை - ரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தில்லையம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கலாயினி, சுபாயினி, சுபாச்சந்திரன் (ஜேர்மனி), சுகந்தினி (ஜேர்மனி), சுதர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவஞானம், சிறிகெங்கபாலா மாலினி, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் திபர்ஷன், வர்ஷினி, சுஜெஜன், கஜீபன், பகீரதன், சஸ்மியா, சுந்தர்ராஜ், சோபிகா, ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் உமாபதி, வரதாதேவி, விக்கினேஸ்வரன், குமாரலிங்கம், சாந்தாதேவி, ஜெகதீஸ்வரன், ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணியம் ஸ்ரோர்ஸ்,*
*"பாலா மில்",*
*உரும்பிராய்.* (50611)(32-14-11)

*தகவல்:*
**பா.சிறிகெங்கபாலா**
*(மருமகன்).*

### சின்னத்துரை புவிராசா

**( உரிமையாளர், சியான் ரேடர்ஸ், அச்சுவேலி)**



யாழ்ப்பாணம், நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை புவிராசா (உரிமையாளர்,சியான் ரேடர்ஸ், அச்சுவேலி) அவர்கள் கடந்த 26.05.2006 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் சின்னத்துரை - கண்மணி தம்பதியரின் மகனும் பழனிச்சாமி - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் தயானி அவர்களின் பாசமிகு கணவரும் சியானுஜன், சாருஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பராசா, சிவராசா, புஸ்பராணி, யோகராசா, ஜெயராணி, வசந்தராணி, ரூபராசா, தபேந்திரன் (யாழ்.பல்கலைக்கழகம், உடற்கல்வி பிரிவு) ஆகியோரின் சகோதரனும் விமலாதேவி, பரமேஸ்வரி, செல்வராசா, அம்பிகா, சுந்தர், சுகந்தினி, கிருஷ்ணபாலன், வினோதினி (ஆசிரியர், யா/விக்னேஸ்வராக் கல்லூரி - கரவெட்டி), சர்மினி (B.A. பேராதனைப் பல்கலைக்கழகம்), நவரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (50614)(32-14-11)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### திருமதி ஆச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் மந்துவிலை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (27-05-2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சு.கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் சோதிலிங்கம் (ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளர், யாழ். கல்வித்திணைக்களம்), சுந்தரராசா (மருந்தாளர் - ஆதார வைத்தியசாலை, திருமலை), பூலோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் குமாரசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), புஸ்பகாந்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியும் குமுதினி (சட்டத்தரணி -கனடா), குணநாதன் (உதவி ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்ளம், திருகோணமலை), குணவதி (ஆசிரியை யா/மீசாலை, வீரசிங்கம் ம.வி.), செந்தூரன் (நிறைவேற்று, முகாமையாளர் - சிலிங்கோ, கொழும்பு), காயத்திரி (கொழும்), சுபாஸ்கரன் (ஆசிரியர்- யா/வரணி ம.வி), சஜந்தி (திருமலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக்ஷயா, திவானன், கஜானன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-05-2006) ஞாயிற்றுக்கிழமை மந்துவிலிலுள்ள இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் மந்துவில் இலுவன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மந்துவில் மேற்கு,*
*கொடிகாமம்.*
(50613)(26-32-14-11)

*தகவல்:*
**ஐ.குமாரசிங்கம்.**
*(மருமகன்).*

## மரண அறிவித்தல்

### கோவிந்தபிள்ளை பரராஜசிங்கம்

**(பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர், மலேரியா தடைப்பகுதி, கிராமிய வைத்திய சாலை, மருதங்கேணி)**

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் தெற்கை (தரவை) பிறப்பிடமாகவும் குடாரப்பினை வசிப்பிடமாகவும் (தற்போது புலோலி தெற்கு, உபயகதிர்காமம்) கொண்ட கோவிந்தபிள்ளை - பரராஜசிங்கம் 26-05-2006 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் இராசம்மா (கிளி) அவர்களின் அன்புக் கணவரும் பரார்த்தனன் (அமுதன்), பிரதீபன், பகீரதன் (கீதன்), சாரங்கன் (சுதன்), உமாகரன் (மாங்கிளி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயரூபி, அனுஷா ஆகியோரின் அன்பு மாமனும் திவ்யா, சந்தோஷ், விதுஷன், தனுஷ் ஆகியோரின் பேரனும் சிவபாதசுந்தரம் (பொன்னம்பலம்), இரத்தினசிங்கம், வீரகத்திப் பிள்ளை (மண்டலாய்), கமலாவதி, பத்மநர்தன், குகநாதன் (சுவிஸ்), இந்திராதேவி, நவநாதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சதாசிவம் அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-05-2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தற்காலிக முகவரியிலுள்ள் உபயகதிர்காமம், புலோலி தெற்கு, புலோலியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.4 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மனைவி,**
**பிள்ளைகள்.**

உபயகதிர்காமம்,
(மனல் விநியோக அலுவலகம் முன்பாக)
புலோலி தெற்கு,புலோலி.
தொ.பே. 077 6139892

(சி/49450)
(26-32-14-11)

## கண்ணீர்க் காணிக்கை

### சிவானந்தன் சிவகுமார்

(தரன்ஸ் தனியார் நிறுவன மேற்பார்வையாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை)



25-05-2006 இல் அகால மரணமடைந்த எமது நிறுவன மேற்பார்வையாளர் சி.சிவகுமார் அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துவதோடு அன்னாரின் இழப்பால் துயருறும் மனைவி, பிள்ளை மற்றும் அவரது பெற்றோர், சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பொன்னாலை வீதி,**
**மானிப்பாய்.** (50615)(26-32-14-11)

**-தரன்ஸ் நிறுவனம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி குருதேவி நித்தியானந்தன்

*வடக்கு புன்னாலைக்கட்டுவன் (கனடா)*



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடா ரொரன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குருதேவி நித்தியானந்தன் அவர்கள் 24.05.2006 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேல் - நாகம்மா தம்பதியரின் மகளும் கரம்பனைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் நித்தியானந்தம் அவர்களின் அன்பு மனைவியும் அமுதன், அபிராமியின் அன்புத் தாயும் விவேகானந்தன் (கனடா), காலஞ்சென்ற அம்பிகைதாசன், புனிதவதி (கனடா), காலஞ்சென்ற பாலசிங்கம், தேவசேனா (தேவி), அம்பிகைபாலன் (டுபாய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சோமசுந்தரம், கமலாதேவி (கனடா), விஸ்வநாயகி (லலி - கொழும்பு), மகா (கனடா), குமுதினி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் கௌசல்யா (கனடா), விஸ்னுமோகன் (கனடா), கலைவாணி (கனடா), குமரன் (கனடா), ரவிவர்மன், பாலகுமார், சரவணன், சுலோசனன் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*போட்டோ ரவி அன் வீடியோ,*
***10A, கன்னாதிட்டி லேன்,***
***யாழ்ப்பாணம்.***
***021 222 6921***

*தகவல்:*
**தேவசேனா (தேவி)**
*(சகோதரி).*

(50611)(32-14-11)

*கனடா* T.P.: ***0014163321561***


## 60 Day's ENGLISH COURSE இலவச ஆங்கில பாடநெறி

- இலகுவில் ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு சிறந்தது ஒரு வழிகாட்டி ENGLISH LANGUAGE யின் தபால் மூலம் ஆங்கிலப் பாடநெறிகள்.
- Basic / Spoken English அடிப்படையில் இருந்தே கற்றுக் கொடுக்கப்படும். Diploma in English விரிவான தமிழ் விளக்கத்துடன் கூடிய பாடத்தொகுதி எமது பாடநெறியில் இணைந்து கொள்ள வயது கட்டுப்பாடு இல்லை பாடசாலை மற்றும் தொழில் புரிவோர் என யாவருக்கும் (இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்) இணைந்து கொள்ள முடியும்
- இலவச Dialog GSM தொலைபேசி இணைப்பு
- இலவச 30 days English புத்தகம் மற்றும்
- இலவச அழகிய கைக்கடிகாரம் ஒன்றும் அடையாள அட்டை என்பன பாடநெறியில் இணையும் அனைத்து மாணவர்களுக்கு வழங்கப்படும் / பாடநெறிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது

**இலவசம்**

மேலதிக விபரங்களுக்கு 5/- ரூபா பெறுமதியான 3 முத்திரை அனுப்பி பெறவும்

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
**P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50ஆவது திருமண வாழ்த்துக்கள்
## 28.05.2006



## திரு.திருமதி சின்னப்பு சுந்தரம்மா

*(கோணாவளை, வசாவிளான்)*

திருமண வாழ்வில் இன்று
பொன் விழாக் காணும் எங்கள்
பேரன்பிற்குரிய பெற்றோரே!
போற்றுதற்குரிய நல்லோரே நீங்கள்
என்றென்றும் பார்போற்றிட
நூற்றாண்டுகாலம் வாழ்ந்திடுவீரென
உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கணேசபுரம்,
கிளிநொச்சி.

(சி/49451)

# கண்ணீர் காணிக்கை



அமரர்
## மாதர் செல்லத்துரை

(அச்சுவேலி)
(தமிழரசுக் கட்சி உள்ளூராட்சி வேட்பாளர், விவசாய சம்மேளனத் தலைவர், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்)

(சி/49453)

காலத்தின் தேவையறிந்து
கண்ணியமாய் பொதுப் பணிகள்
பல செய்துவரும் வேளைதனில்
காலவர்கள் கும்பல் காத்திருந்து
சாய்த்தனரே உங்கள் உயிரை
உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு
வலிகாமம் கிழக்கினை உயர்த்திட
நாங்கள் எண்ணியிருந்த வேளை

காற்றலையில் வந்த செய்தி கேட்டு
துடியாய் துடித்துப் போனோம்
நிச்சயமாய் உங்கள் கனவு
ஈடேறும் காலம் வெகு தூரமில்லை
இது உறுதி.

*தேசிய எழுச்சிப் பேரவை,*
*கோப்பாய் பிரதேசம்.*

# மரண அறிவித்தல்

## சீனியர் நடராசா

தெல்லிப்பழை, குருநாதசாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது 5ஆம் ஒழுங்கை மானிப்பாய் வீதி உடுவிலில் வசித்து வந்தவருமாகிய சீனியர் நடராசா அவர்கள் நேற்று (27.05.2006) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரகாந்தத்தின் அன்புக் கணவரும் பழனிவேல், குமாரவேல், சக்திவேல், கலைவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயவாணி, ரேவதி, நாதசொரூபன் ஆகியோரின் மாமனும் தருக்சன், கோபிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.05.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*5ஆம் ஒழுங்கை,*
*மானிப்பாய் வீதி,*
*உடுவில்.*

(சி/49454)

**தகவல்:**
த.நாதசொரூபன்.


**யாழ். - கொழும்பு - யாழ்.**

மேலதிக விமான சேவை
30.05.2006

முன்பதிவுகளுக்கு
சலுகைக் கட்டணம்

தொடர்புகளுக்கு:
MANOJ AIR TOURS (PVT) LTD,
32, CLOCK TOWER ROAD, JAFFNA.
021 222 3916, 0777 801038, 0777 517019.


# வெலிகந்தவில் சோதனை நிலையம் மீது கிரனேட் வீச்சு

மட்டக்களப்பு,மே28

வெலிகந்த நுவன்புரவில் அமைந்துள்ள ஊர்காவற்படையின் சோதனை நிலையம் மீது நேற்றுக்காலை கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் சேதம் ஏதுவும் ஏற்படவில்லை.

கிரனேட் வெடிப்புச் சம்பவத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

# பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் தற்போதைய நிலைவரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் என்பன குறித்து இந்தச் சந்திப்பில் எரிக் சொல்ஹெய்ம் விரிவாக எடுத்து விளக்கியதாகச் செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து புதுடில்லியில் உள்ள நோர்வே தூதரகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த எரிக் சொல்ஹெய்ம் -

இலங்கையில் பரவலாக வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. இந்த வன்முறைகளுக்கு விரைவில் தீர்வுகாணப்படவேண்டும்.

இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கு அதிக பொறுப்பு உண்டு என நான் கருதுகின்றேன். வன்முறைகளுக்கு முடிவு காணப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

அன்றைய அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கடலில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பணிகள் எவ்வாறு அமையும் என்பது குறித்து அறுத்துறுத்து - முடிவாக எடுத்துக் கூறப்படவில்லை இதுவே தற்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம் - என்றார்.


**ஆசிரியர் தேவை**

தரம் 7,8,9,10 இற்கு
விஞ்ஞான பாடம்
கற்பிக்கக் கூடிய
ஆசிரியர் தேவை.
தொடர்பு:
மாதுரி கல்வி
நிலையம்,
நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
நேரம்: பி.ப.
3.30 .p.m.-6 மணி
வரை நேரில்
சந்திக்கவும்.
(திருநெல்வேலியை
அண்மித்த பகுதியில்
வசிப்பவர்கள்
விரும்பத்தக்கது).
(50622)


# ஹிருதயபூர்வமான அஞ்சலிகள்



## அமரர் கந்தையா இராமநாதன்

(தலைவர் நந்தாவில்
அம்மன் கோயில்)

அன்னாரின் திடீர்
மறைவினால் துயர் அடைந்திருக்கும்
குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன்
அவர் தம் ஆத்மா அம்பிகையின்
பாதக்கமலங்களைச் சென்றடைய
பிரார்த்திக்கின்றோம்.

ச.ஸ்ரீசந்தனக்குருக்கள்
(பிரதமகுரு),
நந்தாவில் அம்மன் தேவஸ்தானம்.

(சி/49456)


YAARL TECH SYS.
AIMST University-Malaysia
Sir Pon Ramanathan Road, Kaladdy Junction
(Near Jaffna University) - 0773 206207
0779004129
யாழ் ரெக் வழங்கும்
**Free Diploma Course**
**Diploma in Hardware Engineering**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
27/May சனி, 29/May திங்கள்
8.30 am, 3.00 pm
அனைத்து கற்கைநெறிக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.
அனுமதிக் கட்டணம் இல்லை
கற்கை நெறிக்கட்டணம் 2000/= மட்டுமே.
இச்சலுகை யூன் 15 வரை மட்டுமே.


# மரண அறிவித்தல்கள்

## மாதர் செல்லத்துரை

அச்சுவேலி தெற்கு பயித்தோலையைச் சேர்ந்த மாதர் செல்லத்துரை அவர்கள் (26.05.2006) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பயித்தோலை,*
*அச்சுவேலி.*

(சி/49455)

**தகவல்:**
மனைவி, பிள்ளைகள்.

## பேரின்பமணி சிதம்பரநாதன்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய திருமதி பேரின்பமணி சிதம்பரநாதன் அவர்கள் 25.05.2006 அன்று காலமானார்.

அன்னார் சிதம்பரநாதன் (காயத்திரி காட்வெயார் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அம்பலவாணர் - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா - செங்கமலம் தம்பதியரின் அன்பு மருமகளும் பிரேமாவதி (லண்டன்), ராதிகா, சிவதாஸ் (சுவிஸ்), வனஜா (கனடா), கிரிஜா, பிரமிளா ஆகியோரின் அன்புத் தாயும் பிரேம சுதன் (லண்டன்), தங்கராஜா (கொழும்பு), ராகுலன்(கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை ஜெயவர்த்தன மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25/3/2 ஈ.எஸ். பெர்னாண்டோ மாவத்தை,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு - 6,*
*தொ.பே.: 0114510609.*

(சி/49579)

**தகவல்:**
சி.சிதம்பரநாதன்
(கணவர்).

## திருமதி தங்கம்மா பாலகிருஸ்ணன்



சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா பாலகிருஷ்ணன் அவர்கள் நேற்று (27.05.2006) சனிக்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் பாலகிருஸ்ணனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரவேலு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் துரைராஜசிங்கம் (சங்கத்தானை) அவர்களின் அன்புச் சகோதரியும் உயதகுமாரன் (உதயன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம், சங்கானை), சதானந்தகுமாரன், பேரின்பராணி, ஜெயராஜா, சிவசோதிமலர் (ஹொலண்ட்), காலஞ்சென்ற லோகேஸ்வரி, கமலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் பவானி (ஆசிரியை சங்கானை சிவப்பிரகாசம் ம.வி.), சீதாதேவி (மாலுசந்தி), கோவிந்தராஜா (கரக்காட்டிலேன் வண்ணார்பண்ணை), பரமேஸ்வரி (நாவற்குழி), கருணானந்தன் (ஹொலண்ட்), ஜெகதீஸ்வரன் (நாச்சிமார் கோயிலடி), பாஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், நிதர்ஷா, கானப்பிரியா, சசீந்தர், சதுர்ஷாயினி, தர்ஷிகா, அனுத்திரன், சாருஜன், உஷாஜினி, கபில்ராஜ், கஜன், அஜித், அஸ்வின், அபிநயா, றஜீத், அர்சுன், அஜின்ந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி*
*சிவஞானப்பிள்ளையார் கோயிலடி,*
*மானிப்பாய்.*
*தொ.பே.: 0779773535.*

(50625)

**தகவல்:**
கணவர், பிள்ளைகள்

## இரட்ணசிங்கம் ராஜன் (ஓவசியர்)



யாழ்ப்பாணம், தட்டாதெருவைப் பிறப்பிடமாவும், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணசிங்கம் ராஜன் (ஓவசியர், யாழ். மாநகர சபை) அவர்கள் நேற்று (27.05.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரட்ணசிங்கம் (நில அளவையாளர்) - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி - நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் கிருஷ்ணவேணியின் அன்புக் கணவரும் பிரகாஷின் (வைத்தீஸ் ... க் கல்லூரி மாணவன்) அன்புத் தந்தையும், ரஞ்சன், மோகன், ராகுலன், நமணி, நஜனி, இரட்ணா, ரங்கன், நமணன், ராஜி, ராகவன், ராகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ரஞ்சன் இரட்ணசிங்கம்,*
*41A E.A. GOORAY Mawatha,*
*Wellawatha. Colo-06.*

(50624)

**தகவல்:**
ராஜன் கிருஷ்ணவேணி.


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org